Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 106 | சனிக்கிழமை 12 மார்ச் 2022 | மாசி 28 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

**கொரோனா**
நேற்று 467
மொத்தம் 6,55,383

**உயிரிழப்பு**
நேற்று 07
மொத்தம் 16,381

## யாழ். கட்டுவனில் ஹெரொய்னுடன் பிடிபட்ட பெண்!

யாழ்ப்பாணம், மார்ச் 12
தெல்லிப்பழைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுவன் மேற்கு பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் 240 மில்லிக்கிராம் ஹெரொய்னுடன் நேற்றுக் கைது 15



## முல்லைத்தீவில் நேற்று வெடிபொருள்கள் மீட்பு!

முல்லைத்தீவு, மார்ச் 12
முல்லைத்தீவு இரட்டைவாய்க்கால் மற்றும் புதுமாத்தளன் பகுதிகளிலிருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.
புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று 15



## வவுனியாவில் விபத்து முதியவர் உயிரிழப்பு!

வவுனியா, மார்ச் 12
வவுனியா, பாரதிபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தர்மராஜா (வயது-64) என்ற முதிய 15

## பெற்றோல் இனி 254 ரூபா!

77 ரூபாவால் எகிறியது

கொழும்பு, மார்ச் 12
பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இலங்கையில் அனைத்துவகை பெற்றோல் மற்றும் டீசலின் விலையை 15

பாண் 30 /=
கோதுமை 35 /=
பணிஸ் 10/=
பால்மா 300/=
மருந்து வகை 29%
கொத்துரொட்டி 30/=
சோற்றுப்பார்சல் 20/=

# ஏறுகின்றது விலை இறங்குகிறது ரூபா!!

கொழும்பு, மார்ச் 12
டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி மிகமோசமாக சரியத் தொடங்கியதையடுத்து சகல பொருள்களினதும் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன. 15

## நம்பிக்கையை கைவிடாதீர்கள்

நிதியமைச்சர் பஸில் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 12
உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் காரணமாக பொருளாதார நெருக்கடிகளை முகம் கொடுக்க வேண்டியுள்ளது. மக்கள் எம்மீது வைத்த 15

## சர்வதேச நாணய நிதியத்தை நாடுகிறார் அமைச்சர் பஸில்!

கொழும்பு, மார்ச் 12
பொருளாதார நெருக்கடி நிலையை அடுத்து, நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச, சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கு பேச்சு நடத்தியுள்ளார் என்று சர்வதேச 15



எரிவாயு இருப்பில்லை

## வரிசையில் நின்ற மக்கள் ஏமாற்றம்!

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்ப்பாணத்தில் உள்ள எரிவாயு நிரப்பு நிலையத்துக்குச் சென்று நீண்ட வரிசையில் காத்திருந்தும்எரிவாயுகிடைக்காமல் நேற்று ஏமாற்றத்துடன் பலர் திரும்பிச் சென்றுள்ளனர்.
இது தொடர்பில் 15

## மின்கட்டணம் 10 மில்லியன் ரூபா செலுத்தவில்லை டக்ளஸ்!

மின்சார சபையின் இணைந்த தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

யாழ்ப்பாணம், மார்ச் 12
ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் மீன்பிடித்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சுமார் 10 15

## யாழ்ப்பாணத்திலும் பேக்கரிப் பொருள்களின் விலைகள் உயர்வடையும்

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்ப்பாணத்திலும் பாண் மற்றும் பணிஸ் என்பனவற்றின் விலைகள் உயர்வடையும் என்று 15

## கச்சதீவு திருவிழா இன்றுடன் நிறைவு!

யாழ்., மார்ச் 12
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. இந்தத் திருவிழா 15



## கோத்தாபய அரசாங்கத்தின் அழைப்பு பகடைக் காயாக்கும் கபடத்தனமே; துணைபோகக்கூடாது கூட்டமைப்பு

சம்பந்தனுக்கு ரெலோ அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 12
சர்வதேசத்தில் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட அழுத்தம் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த ஜனாதிபதி சம்மதம் தெரிவித்து இந்தப் பேச்சு ஏற்பாடாகியுள்ளது. சர்வதேச அழுத்தங்களில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்வதற்கு ஒரு பகடைக்காயாக கூட்டமைப்பைப் பயன்படுத்தும் கபடத்தனத்துக்கு கூட்டமைப்பு துணைபோகக்கூடாது என்று ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளு 15




"போறபோக்கைப் பார்த்தால் பழையபடி றோட்டில இனிமேல் சைக்கிள் மட்டும்தான் ஓடப்போகுது போல"

## மண்ணெண்ணெய் தருவதாகக் கூறி வயோதிபப் பெண்ணிடம் ஆயிரம் ரூபா 'அபேஸ்'

யாழ்ப்பாணம், மார்ச் 12
மண்ணெண்ணெய் பெற்றுத் தருவதாகக் கூறி வயோதிபப் பெண்ணிடம் இருந்து ஆயிரம் ரூபா 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லையாம்

'உருட்டுகிறார்' பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர்



**கொழும்பு, மார்ச் 12**

**நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இருக்கவில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எரிபொருள் விநியோகம் சாதாரணமாக நடைபெற்றபோதிலும், நாளாந்த எரிபொருள் பாவனை அதிகரித்துள்ளது. உலகசந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளமையால் உள்நாட்டிலும் விலை அதிகரிக்கலாம் என்ற அச்சம் காரணமாக மக்கள் அதிகளவு எரிபொருளைக் கொள்வனவு செய்கின்றனர்.**

இவ்வாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

'வலு சக்தி நாட்டுக்கு ஒரு பலம்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏற்கனவே டீசல் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதுடன், இந்த மாதம் நான்கு கப்பல்களில் இருந்து 1 லட்சத்து 72 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் கிடைக்கவுள்ளதாகவும், அவ்வாறு கிடைக்கும் எரிபொருள் விரைவாக விநியோகிக்கப்படும் என்றும் எரிசக்தி அமைச்சின் செயலர் திருமதி கே.டி.ஆர். ஒல்கா தெரிவித்தார்.

மின்உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான பல கச்சா எண்ணெய்க் கப்பல்கள் (30,000 மெற்றிக் தொன்) வந்துள்ளன. அதன்மூலம் எரிபொருள் எண்ணெயைப் பயன்படுத்தும் வெஸ்ட் கோர்ட் போன்ற மின் உற்பத்தி நிலையங்கள் முழுமையாக இயங்கமுடியும் என்று செயலர் சுட்டிக்காட்டினார். மார்ச் மாதம் 20ஆம் திகதி அளவில் மேலும் சில கச்சா எண்ணெய்க் கப்பல்கள் வரவுள்ளன.

'எரிபொருள் கையிருப்புக் கிடைத்ததும், தற்போதைய எரிபொருள் மற்றும் மின்சாரப் பிரச்சினைகள் மிக விரைவாகத் தீரும். எங்களின் திட்டங்களின்படி தேவையான டொலரைப் பெற்றுக்கொள்வது குறித்தும் உரிய தரப்பினருக்குத் தெரியப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலர், திறைசேரியின் செயலர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து, இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான ஆதரவை வழங்கி வருகின்றனர்' என்று ஒல்கா மேலும் தெரிவித்தார்.

எரிசக்தி துறையின் எதிர்காலத் திட்டங்களை விளக்கிய அவர், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான திருகோணமலை எண்ணெய்த்தாங்கிகளை நவீனமயப்படுத்தியதன் பின்னர் கொழும்பு வழியாகச் செல்லாமல் வடக்கு, வடமத்திய, பதுளை போன்ற பகுதிகளுக்கு திருகோணமலை ஊடாக எண்ணெய் விநியோகத்தை மேற்கொள்ளமுடியும் - என்றார். இதன் மூலம் மாதாந்தம் சுமார் 800 மில்லியன் ரூபா சேமிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலை விரைவில் அதிகரிக்குமா என்ற கேள்விக்கு பதிலளித்த செயலர், இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோதிலும், அவ்வாறானதொரு தீர்மானத்தை விவேகத்துடன் எடுக்கவேண்டும் -என்றார். (ஒ-இ)

வெதுப்பகப் பொருள்களுக்கு விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய விலைப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அந்த அட்டவணை வருமாறு...

12.03.2022முதல் ஆகக்கூடிய சில்லறை விலை

| விபரம் | சில்லறை விலை |
|---|---|
| பாண் | 110.00 |
| வெட்டு பாண் | 120.00 |
| ஸ்பெஷல் பாண் | 140.00 |
| கிறீம் பணிஸ் | 60.00 |
| ரீ பணிஸ் | 50.00 |
| கொம்பு பணிஸ் | 35.00 |
| சங்கிலி பணிஸ் | 50.00 |
| ஜாம் பணிஸ் | 50.00 |
| கறி பணிஸ் | 50.00 |
| வெட்டு பணிஸ் | 50.00 |
| அடைக் கேக் | 40.00 |
| பேஸ்ரி | 60.00 |

## ஓட்டோ கட்டணமும் விரைவில் உயரும்!!

கொழும்பு, மார்ச் 12

முதல் கிலோமீற்றருக்கு 80 ரூபாவும் இரண்டாவது கிலோமீற்றருக்கு 50 ரூபாவும் முச்சக்கர வண்டிக் கட்டணமாக அறவிடப்படுவது நியாயமானது என்று அகில இலங்கை முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கம் யோசனை முன்வைத்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல காரணிகளைக் கருத்திற்கொண்டு பார்க்கும் போது, இது நியாயமான கட்டண அதிகரிப்பு என அதன் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார். (ஒ-இ)

## விமானப் பயணச்சீட்டு விலை 27 வீதத்தால் எகிறியது

கொழும்பு, மார்ச் 12

இலங்கையில் விமானங்களை இயக்கும் அனைத்து விமான நிறுவனங்களும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் பயணச்சீட்டு விலையை 27 வீதமாக அதிகரித்துள்ளது என இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது. அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையே இதற்குக் காரணம் என அதன் தலைவர் உபுல் தர்மதாச அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை மத்திய வங்கி நேற்றுமுன்தினம் வெளியிட்ட நாணய மாற்று வீதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலையானது 259.99 ரூபாவாக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)



## 2 பில்லியன் டொலர் கடன் வழங்குகின்றது ஏ.டி.பி.

கொழும்பு, மார்ச் 12

ஆசிய அபிவிருத்தி வங்கியால் (ஏ.டி.பி.) 2 பில்லியன் டொலர் கடன் இலங்கைக்கு இந்த ஆண்டு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை நேற்றுமுன்தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே மேற்கண்டவாறு உறுதியளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஊடகப் பிரிவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆசிய அபிவிருத்தி வங்கி, கடந்த வருடம் 750 மில்லியன் டொலர் சலுகைக் கடன்களை வழங்கியது. இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கு 2 பில்லியன் டொலர் கடனுதவி ஒதுக்கப்படும் என்று மசட்சுகு அசகாவா குறிப்பிட்டார்.

கொவிட் தொற்றுப்பரவல் காரணமாகப் பின்னடைவைச் சந்தித்த இலங்கையின் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கும், மனிதவள அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பு வழங்குவதாக தலைவர் மேலும் தெரிவித்தார்.

பசுமை விவசாயம், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தி மற்றும் கைத்தொழில் வலயங்களில் நேரடி வெளிநாட்டு முதலீட்டுக்காக ஆசிய அபிவிருத்திவங்கியின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்- என்றுள்ளது. (ஒ-இ)

ஈஸ்டர் தாக்குதல்:

## உயிரிழந்தவர்களுக்கு அமெ.தூதுவர் அஞ்சலி

கொழும்பு, மார்ச் 12

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக புதிதாக நியமிக்கப்பட்ட ஜூலி சங் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்துக்கு நேற்றுச் சென்று, ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

"உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த 5 அமெரிக்கர்கள் உள்ளிட்ட ஏனையவர்களையும் நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூருகின்றோம்" என்று தனது ருவிட்டர் பக்கத்தில் அமெரிக்கத் தூதுவர் பதிவிட்டுள்ளார். (ஒ-இ)

## பூஸ்டர் ஏற்றும் பணி யாழில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்.மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் கொரோனா 3ஆவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமான இந்தப் பணி இருவாரங்களுக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்கள் இதுவரை 25 வீதமானவர்கள் மட்டுமே தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி முதல் இலங்கைப் பிரஜை ஒருவர் முழுமையாகத் தடுப்பூசியேற்றப்பட்டுள்ளமைக்கான சான்றிதழின்றி பொது இடத்துக்குள் பிரவேசிக்க முடியாது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி முதல் 3 தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ளாதவர்கள் பொது இடங்கள், வேலைத்தலங்களுக்குச் செல்ல முடியாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்தடையின் எதிரொலி:

# மண்ணெண்ணெய் லாம்புகள், ரோர்ச் லைட் வழங்குமாறு மருத்துவமனை கோரிக்கை



**சாவகச்சேரி, மார்ச் 12**

**நாட்டில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மின்தடை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மருத்துவமனைகளும் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன.**

அந்தவகையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் தங்கியுள்ள நோயாளர்களின் நன்மை கருதி மண்ணெண்ணெய் லாம்புகள் மற்றும் ரோர்ச் லைட்களைக் கொள்வனவு செய்து வழங்குமாறு நோயாளர் நலன்புரி சங்கத்தை, மருத்துவமனைப் பொறுப்பதிகாரி கோரியுள்ளார்.

மின்தடை காரணமாக மின்பிறப்பாக்கிகளைப் பயன்படுத்தி சேவைகள் வழங்கப்பட்டு வந்தன. இருப்பினும் தற்போது எரிபொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் மின்பிறப்பாக்கிகளையும் இயக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே மின்தடை நேரத்தில் நோயாளர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்படுத்தக்கூடிய ரோர்ச் லைட்கள் மற்றும் மண்ணெண்ணெய் லாம்புகளைக் கொள்வனவு செய்து உடனடியாக வழங்கி உதவுமாறு மருத்துவமனைப் பொறுப்பதிகாரி கோரியுள்ளார். (ஒ-9)

## தென்மராட்சியில்,

# 3 தடுப்பூசி ஏற்றியோருக்கு கோயில் செல்ல அனுமதி

சாவகச்சேரி, மார்ச் 12

தென்மராட்சிப் பிரதேசத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் நடைபெறும் கோயில்களில் மூன்று தடுப்பூசிகளை ஏற்றியவர்களை மட்டும் கலந்துகொள்ள அனுமதிக்கவேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் கோயில் நிர்வாகிகளுக்கு அறிவித்துள்ளனர்.

இதற்கமைய கோயில் வாயிலில் கடமையிலுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 3 தடுப்பூசிகளும் ஏற்றிய அட்டை வைத்திருப்பவர்களை மட்டும் உள்ளே செல்ல அனுமதி வழங்குவர். பரிசோதனையில் மூன்று தடுப்பூசி ஏற்றாதவர்கள் காணப்படின் எதிர்வரும் திங்கட்கிழமைகளில் கோயிலில் பொங்கல் வழிபாடு மேற்கொள்ள அனுமதி வழங்கப்படமாட்டாது.

அத்துடன் அன்னதானம் பொதி செய்து வழங்க அனுமதி வழங்கப்பட்ட நிலையில் அன்னதானத்துக்கான சமையலில் ஈடுபடுவோர் மூன்று தடுப்பூசிகளையும் ஏற்றியவர்களாகவும் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் மருத்துவச் சான்றிதழ் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் மேலும் அறிவித்துள்ளனர். (ஒ-14-9)

## விமலின் மனைவிக்கு எதிரான வழக்கு மே வரை ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 12

முன்னாள் அமைச்சர் வீரவன்ஸவின் மனைவி சசி வீரவன்ஸவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

போலிஆவணங்களைப் பயன்படுத்தி கடவுச்சீட்டுப் பெற்றமை தொடர்பில் சசி வீரவன்ஸவுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்படவிருந்தது. குடிவரவு மற்றும் குடியகல்வுத்திணைக்களத்தில் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து ராஜதந்திரக் கடவுச்சீட்டு உட்பட இரண்டு கடவுச்சீட்டுக்களைப் பெற்று மோசடி செய்ததாக அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ஒ-இ)

# ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்கத்தான் வேண்டுமாம்!

## தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினரின் பதில்

சாவகச்சேரி, மார்ச் 12

பனைசார் உற்பத்தித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கான உபகரணங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் மழையிலும் வெயிலிலும் 3 மாதங்களாகக் கிடக்கின்றன. இவற்றை இணைத்தலைவர் வந்துதான் வழங்கிவைக்க வேண்டும் என்று பிரதேச செயலகத்தினர் பயனாளிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மட்டுவில் சந்திரபுரம் மற்றும் வரணி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் பனை உற்பத்திக் கிராமங்களாக அறிவிக்கப்பட்டன. இந்தக் கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்குரிய உபகரணங்களும் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டன. மட்டுவில் சந்திரபுரம் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு உபகரணங்கள் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், அதே காலப்பகுதியில் பனை உற்பத்திக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்ட வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்கு மாத்திரம் இதுவரை வழங்கப்படவில்லை.

அவர்களுக்குரிய கள் சேகரிப்பு பரல்கள், கத்தி, கூடு, தாச்சி உட்படப் பல்வேறு பொருள்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் மழையிலும், வெயிலிலும் கடந்த 3 மாதங்களாகக் கிடந்து பழுதடைகின்றன.

தற்போது பனங்கள் பருவகாலம் ஆரம்பித்துள்ள நிலையில், பொருள்களை வழங்குமாறு பயனாளிகள் பிரதேச செயலகத்தில் கோரியுள்ளனர்.

அதற்கு இணைத்தலைவர் வந்து சம்பிரதாயபூர்வமாக இதனை ஆரம்பித்துவைப்பார். அதன் பின்னர்தான் வழங்கமுடியும் என்று பிரதேச செயலகத்தில் பதிலளித்துள்ளனர். இணைத்தலைவர் வந்து பொருள்களை வழங்குவதற்கிடையில் பனங்கள்ளின் பருவகாலம் முடிவடைந்துவிடும் என்று பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-9)




**பெ**ற்றோல் விலை ஏறிக்கொண்டே போகுது. அதால பக்கத்துக் கடைக்கு மோட்டார் சைக்கிளில போகவேணுமெண்டாக் கூட நூறு ரூபாவுக்கு மேல செலவாகுது. கிட்ட உள்ள இடத்துகே இப்பிடி எண்டால் மாவட்டம் விட்டு மாவட்டம் போய் வேலை பாக்கிறவை என்ன செய்யிறது? அதால முந்தி மோட்டார் சைக்கிள், வாகனங்களில போய் வந்தவைகூட இப்ப பஸ்ஸில தான் பயணம். இப்பிடிக் கும்பலா எல்லாரும் பஸ்ஸில தொத்திறதால கடும் இடநெருக்கடி.

சும்மாவே பஸ்ஸிகளில கிழங்கு அடுக்கிற மாதிரித்தான் ஆக்களை நெருக்கியடிச்சு ஏத்திக் கொண்டு போறவை. இப்ப சனமும் கூடினால் கேக்க வேணுமோ? மூச்சு முட்டுற அளவுக்கு, அங்கால இஞ்சால அரங்கேலாத மாதிரித்தான் போய்வரவேண்டிக் கிடக்காம். இப்பிடித்தான் போன எட்டாம் திகதி யாழ்ப்பாணத்தில இருந்து ஒரு பஸ் திருகோணமலைக்கு வெளிக்கிட்டது. என்னதான் சனம் பேக்கரிப் போறணைக்குள்ள கிடக்கிற மாதிரி அசைய ஏலாமல், அப்பிடியே அவிஞ்சு கொண்டிருந்தாலும் பஸ்ஸுக்க பாட்டுக்கு மட்டும் குறைவில்லை. போய்வாற ஆக்கள் சீவன் போறமாதிரி நிக்கேக்க, எப்பிடித்தான் பாட்டை ரசிப்பினம்? பாட்டும், சனமுமாக பஸ் போய்க் கொண்டிருக்கேக்க, திடீரெண்டு ஒரு பக்கம் ஆட்டுப்பட்டு, சரியிற மாதிரி போட்டுது. உள்ளுக்க இருக்கிறவைக்கு என்ன நடக்கெண்டே தெரியேலை. ஒருவேளை பாரம் கூடி ஒருபக்கம் சரிக்குதோ? எண்டு தான் எல்லாரும் நினைச்சவை. பிறகு கிரீச் எண்டு சத்தம். அப்பிடியே பஸ் நிண்டிட்டுது.

உடனேயே கொண்டக்ரர் ஏதோ குண்டு வெடிக்கப் போற மாதிரி 'எல்லாரும் கீழ இறங்குங்கோ' எண்டு கத்திக்கொண்டே ஓடினார். சனமும் என்னவோ, ஏதோவெண்டு பதறிக்கொண்டு இறங்கிச்சு. இறங்கிப் பார்த்தால்...... பஸ்ஸின்ர ஒரு சில்லைக் காணேலை. பஸ்ஸஸுக்க போட்ட பாட்டுப் பிடிக்காமலோ என்னவோ, அந்தச் சில்லு கோவிச்சுக் கொண்டு கழண்டு எங்கேயோ ஓடிப் போட்டுது. கண்ணுக்கெட்டின தூரம் வரை அதைக் காணேலை. அப்பிடி சொல்லாமல் கொள்ளாமல் துலைஞ்சுபோன 'ஓடுகாலிச் சில்லை' தேடி கொஞ்சப்பேர் வெளிக்கிட, பஸ்ஸுக்க இருந்த ஸ்டெப்னி சில்லை எடுத்துப் பூட்டத்தொடங்கினார் ரைவர். அந்தச் சில்லுப் பூட்டி முடியவும், ஓடிப்போன சில்லோட தேடிப்போன ஆக்கள் வரவும் சரியாயிருந்தது.

சில்லுக் கழண்டு போன நிலைக்கு ரைவர் கொஞ்சம் அலட்சியமா இருந்திருந்தால் அவ்வளவுபேரும் றோட்டில பிரண்டு கொட்டிண்டு பிரகண்டமாப் போயிருக்கும். ஆனால் ஆள் கொஞ்சம் கெட்டிக்காரன் எண்டதால எல்லாரையும் காப்பாத்திட்டார். இப்பிடி தூர இடங்களுக்குப் போய்வாற வாகனத்தை இப்பிடியோ சி.ரி.பிக்காரர் வைச்சிருப்பினம்? கொஞ்சமாவது சனத்தில அக்கறை வேண்டாமோ? வாகனம் எண்டது தனிய இரும்போ தகரமோ இல்லை. எத்தனையோ பேரின்ர உயிரைச் சுமக்கிற பொருள். ஒரு சின்ன அலட்சியம் கூட பெரிய அசம்பாவிதமாகிடும். இனியாவது இப்பிடி பச்சைத் தண்ணிப் பலகாரம் சுடாமல் சி.ரி.பிக்காரர் சனத்தில அக்கறை எடுப்பினமோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நகர அபிவிருத்தித் திட்டங்கள் ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, மார்ச் 12

நாட்டின் முக்கியமான நகரங்களில் செயற்படுத்த எதிர்பார்க்கப்படும் உத்தேச நகர அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விவரங்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன. நகர அபிவிருத்தி அதிகாரசபை, துறைசார் நிறுவனங்களுடன் இணைந்து சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இந்த அபிவிருத்திப் பணிகளைத் திட்டமிட்டுள்ளது.

முதற்கட்டத்தின் கீழ், காலி, பண்டாரவளை, இரத்தினபுரி நகர மத்தி மற்றும் திம்பிரிகஸ்யாய, கோட்டை, புறக்கோட்டை மற்றும் கொள்ளுப்பிட்டி ஆகிய விசேட பொருளாதார வலயங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. விசாலமான சாலைகள், வாகனத் தரிப்பிட வசதிகள், நடை பாதைகள், வர்த்தக வளாகங்கள் மற்றும் சூரிய சக்தியில் இயங்கும் விளக்கு அமைப்புக்கள் போன்ற பல வசதிகள் இந்தப்புதிய திட்டத்தில் அடங்குகின்றன. திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது, குறித்த நகரங்களைச் சூழவுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பாதுகாப்பதுடன், பொது மக்களைக் கவரும் வகையில் பழைய கட்டடங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். (வ-இ)

# தேசிய அரசு அமைக்கும் யோசனை: சிங்கள கடும்போக்காளர்கள் எதிர்ப்பு

**கொழும்பு, மார்ச் 12**

**சர்வ கட்சி மாநாட்டை நடத்தி தேசிய அரசை உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்கின்றது. நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள நெருக்கடி நிலைமையை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு மேற்குலக நாடுகள் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்கின்றன. அரசு கொள்கைக்கு முரணாக செயற்படுகிறது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் வசந்த பண்டார தெரிவித்தார்.**

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தால் நடைமுறையில் பல பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. எரிபொருள் விநியோகம், மின்சார விநியோகம் ஆகிய அடிப்படைச்சேவைகளில் தோற்றம் பெற்றுள்ள நெருக்கடிக்கு கொவிட் பெருந்தொற்று பரவல் காரணம் என்று அரசு குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

சர்வகட்சி மாநாட்டை நடத்தி தேசிய அரசை உருவாக்கும் நிலைப்பாட்டில் இருந்துகொண்டு அரசாங்கம் செயற்படுகிறது. நடைமுறையில் உள்ள பொருளாதாரக் கொள்கைகள் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணியாக அமைந்துள்ளன. நாட்டில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படைப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்குலக நாடுகள் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுயற்சிக்கின்றன.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளின் தனியுரிமையினைப் பெற்றுக் கொள்ளவே இந்தியா எரிபொருள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்காக இலங்கைக்கு உதவு செய்கிறது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஆட்சிமாற்றம் ஏற்படுவதற்கு ஒத்துழைப்பு வழங்கினோம். அரசு கொள்கைக்கு முரணாக செயற்படுவதால் மக்கள் அரசுக்கு எதிராக நாளாந்தம் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். அரசைப் பலவீனப்படுத்த அரசாங்கத்துக்குள் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் யோசனைகளுக்கும், சிவில் அமைப்புக்களின் யோசனைகளுக்கும் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் -என்றார். (ஒ-இ)

# இலங்கைக்குக் கடன் இந்திய வங்கி அனுமதி

எரிபொருள் கொள்வனவுக்காக இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்க இந்திய மத்திய வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியாவிலுள்ள ஏற்றுமதியாளர்களிடமிருந்து மொத்தக் கடனில் குறைந்தது 75 சதவீத பொருள்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் மீதமுள்ள 25 சதவீதம் இந்தியா தவிர்ந்த வேறு நாடுகளிடமிருந்து கொள்வனவுகளை மேற்கொள்ளப்பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

# ஐ.எம்.எவ். பிரதிநிதிகள் வருகை

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்.) பிரதிநிதிகள் இருவர் இலங்கை அரசின் அழைப்புக்கு அமைவாக நாளை நாட்டுக்கு வருகை தரவுள்ளனர். நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (ஒ-இ)

# இரத்மலானையிலிருந்து சர்வதேச சேவை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 12

54 வருடங்களுக்குப் பின்னர் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமான சேவைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாலைதீவு அரசுக்குச் சொந்தமான எயார் லைன்ஸ் நிறுவனங்கள் இரத்மலானையை நோக்கி சேவைகளை ஆரம்பித்துள்ளன.

வாரத்துக்கு 3 நாள்கள் இடம்பெறும் இந்தப் பயணங்கள் மே மாதத்தின் பின்னர் 5 ஆக அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-ரி1)



# தமிழகத்தில் கைதான இலங்கைப் பொலிஸ்க்கு விளக்கமறியல் நீடிப்பு

இலங்கையில் தேடப்பட்டு தமிழகத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ராமநாதபுரம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது;

பிரதீப்குமார் பண்டார (வயது 32) இலங்கைத் துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தார். கடந்த 2020ஆம் ஆண்டு பொலிஸ் நிலையத்தில் இருந்த சுமார் 23 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருளும் பொலிஸ் உத்தியோகத்தரும் காணாமற் போயிருந்த நிலையில் அவரைப் பொலிஸார் தேடி வந்தனர்.

பிரதீப்குமார் கடந்த 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் தனுஷ்கோடிப் பகுதிக்குத் தப்பிச் சென்றபோது அவரைப் பொலிஸார் கைது செய்து விளக்கமறியலில் வைத்தனர். (வ-56)

# மாணவனை துஷ்பிரயோகம் செய்த ஆசிரியைக்கு எதிராக விசாரணை

கொழும்பு, மார்ச் 12

4 ஆண்டுகளாக பாடசாலை மாணவனை பாலியல் நடவடிக்கைகககளுக்கு பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கணினி ஆசிரியைக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

20 வயதுடைய இளைஞர் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிப்பது தொடர்பில் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்பு அதிகாரிகள் நீதிமன்றுக்கு முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்ததைத் தொடர்ந்து நீதிவான் இந்த விசாரணைக்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

பாதிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் இளைஞர் மாணவராக இருந்தபோது சந்தேகநபரான ஆசிரியையை கிரிக்கெட் சமர் (பிக்மட்ச்) ஒன்றின்போது சந்தித்துள்ளார். அதன்பின்னர் அவரை ஏழு தடவைகள் கல்கிஸ்சைப் பகுதியில் உள்ள ஹோட்டலொன்றுக்கு ஆசிரியை அழைத்துச்சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இந்த நிலையில் அதுகுறித்து விசாரணைகளை முன்னெடுத்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஒ-இ)

# மகளை துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு 54 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை

கொழும்பு, மார்ச் 12

தனது மகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய தந்தைக்கு, 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 18 வருடங்கள் வீதம் 54 வருட கடூழிய சிறைத்தண்டனையும், 1 மில்லியன் ரூபா இழப்பீடும், 30 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த உத்தரவிட்டார். 3 சிறைத் தண்டனைகளையும் அவர் சம நேரத்தில் (18 வருட சிறைத்தண்டனை) அனுபவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. அம்பாந்தோட்டை, சமோதகம பிரதேசத்தில் வசிக்கும் 46 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டவர், தனது மனைவி வெளிநாட்டில் பணிபுரியும் போது குடிபோதையில் இருந்ததோடு தனது பராயமடையாத மகளை பல சந்தர்ப்பங்களில் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

தந்தையின் தொல்லை தாங்க முடியாமல் அப்பகுதியிலுள்ள சிறுவர் கழகம் ஒன்றின் பாதுகாவலரிடம் மகள் கூறியதையடுத்து, அம்பாந்தோட்டைப் பொலிஸில் சிறுமியை முற்படுத்தினர். அம்பாந்தோட்டைப் பொலிஸார் சட்டமா அதிபர் ஊடாக மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்துக்கு இடமின்றி அரசுத் தரப்பு நிரூபித்ததால், குற்றம் சாட்டப்பட்டவர் மூன்று குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முன்மொழிவுகளை புறக்கணித்த மஸ்தான் எம்.பி.க்கு எதிர்ப்பு

## பிரதேசசபை உறுப்பினர்கள் போராட்டம்

**முல்லைத்தீவு, மார்ச் 12**

**பிரதேசசபை உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்களை புறந்தள்ளி, முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய காதர் மஸ்தானின் பரிந்துரையில் புதிய வேலைத்திட்ட முன்மொழிவுகள் பிரதேசசெயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதைக் கண்டித்தும், தம்மால் வழங்கப்பட்ட திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துமாறு கோரியும் முல்லைத்தீவு மாவட்ட பிரதேசசபைகளின் தவிசாளர்கள் மற்றும், உறுப்பினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது;

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் ஒவ்வொரு பிரதேசசபை வட்டாரங்களுக்கும் நான்கு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கமைய, முல்லைத்தீவு மாவட்ட பிரதேசசபை உறுப்பினர்களும் குறித்த நிதி ஒதுக்கீட்டுக்குரிய, வேலைத்திட்ட முன்மொழிவுகளை பிரதேசசெயலகங்கள் ஊடாக அனுப்பியிருந்தனர்.

இவற்றில் அனுமதி கிடைக்கப்பெற்ற திட்ட முன்மொழிவுகளுக்குரிய ஆரம்பக்கட்ட வேலைகள், கடந்த பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில், முல்லைத்தீவு பிரதேசசபை உறுப்பினர்கள் முன்வைத்த திட்டங்கள் புறந்தள்ளப்பட்டு, காதர் மஸ்தானின் பரிந்துரையில் புதிய வேலைத்திட்ட முன்மொழிவுகள் பிரதேசசெயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என உறுப்பினர்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதைக் கண்டித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, பிரதேச சபைத் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து நிதி அமைச்சருக்கான தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனிடம் கையளித்தனர். (வ-19-246)

# வடக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 12

தேசிய ரீதியில் செயற்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைச் சங்கத்தால் நாளை மறுதினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள நாடளாவிய தொழிற்சங்க நடவடிக்கைக்கு வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் ஆதரவு வழங்கவுள்ளது.

இது தொடர்பாக வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நீண்ட கால அடிப்படையில் காணப்படும் சம்பள முரண்பாடுகள், மேலதிக கொடுப்பனவுகள், பதவியுயர்வு மற்றும் ஏனைய தீர்க்கப்படாத பிரச்சினைகளை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் இந்த தொழிற்சங்கப் போராட்டத்துக்கு வடமாகாணத்தை சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

எனவே குறித்த தினத்தில் வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது திணைக்களங்களுக்கு சுகவீன விடுமுறையை உரிய முறையில் அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றுள்ளது. (வ-20)

# வீடு கையளிப்பு



வவுனியா கோதண்டர் நொச்சிக்குளம் கிராமத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக் கிளையால் நிரந்தர வீடு அமைத்துக்கொடுக்கப்பட்டது. கனடா நாட்டு உறவுகளின் ஏழு இலட்சம் ரூபா நிதிப் பங்களிப்பில் இந்த வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டது. குடும்பத் தலைவர் உட்பட மூவர் யுதத்தில் கொல்லப்பட்டு தற்போது மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் குடும்பத்துக்கு அரசின் எந்தத் திட்டத்தின் கீழும் வீடொன்றைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ-110)

# சிறுவர் ஓவிய விழாவுக்கு ஆக்கங்கள் கோரல்

சாவகச்சேரி, மார்ச் 12

புத்தசாசன கலாசார மற்றும், சமய அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், அரச கட்புல கலை ஆலோசனைக் குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் 2022 ஆம் ஆண்டு அரச சிறுவர் ஓவிய விழாவுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டியில் பாடசாலை, அறநெறிப் பாடசாலை, கலாசார மத்திய நிலையம், கலை நிறுவனங்கள் ஆகியவற்றின் மாணவர்கள் கலந்துகொள்ள முடியும். அத்துடன் போட்டிகள் பாலர் பிரிவு, சிறுவர் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, அதி சிரேஷ்ட பிரிவுகளாக நடத்தப்படும்.

இதற்கமைய மாணவர்களின் ஓவியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்களுக்கு அரச சிறுவர் ஓவிய விழாவில் பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிகளுக்கு ஆக்கங்களை வழங்கவுள்ள தென்மராட்சி பிரதேச மாணவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஆக்கங்களைக் கையளிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ-14-9)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர்(2022 மார்ச்) இறுதிப் பரீட்சை, தேசிய தொழில் தகைமை மட்டம் 5/6 இன் i,ii,iii ஆம் எழுத்துப் பரீட்சை 2021 டிசெம்பர் மற்றும் 2022 மார்ச் ஆகிய இரு பரீட்சைகளுக்குமான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் சமர்ப்பிக்குமாறு யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-14)

# கலந்துரையாடல்

சாவகச்சேரி, மார்ச் 12

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட காலபோக நெற்செய்கை அறுவடை செய்யப்பட்ட வயல்களில் சிறு தானியச் செய்கை மற்றும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை தனங்களப்பு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலில் அமைப்பின் அனைத்து உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் சி.புவனதாஸ் அறிவித்துள்ளார். (ஓ-14-9)

# மாணவர்களுக்கு சொற்பொழிவு

அறிவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில், "அறத்தால் வருவதே இன்பம்" என்ற தலைப்பில் மாணவர்களின் உளவளர்ச்சி கருதிய சொற்பொழிவு, நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் சொற்பொழிவை கம்பவாரிதி ஜெயராஜ் ஆற்றவுள்ளார்.

அத்துடன் சொற்பொழிவில் மாணவர்களின் கேள்வி-பதிலும் இடம்பெறவுள்ளது.

அதிபர் இ.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஓ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் கட்சியின் கூட்டத்தை கம்மன்பில, விமல் புறக்கணிப்பு

## நாணயக்காரவும் 'அப்சென்ட்'

கொழும்பு, மார்ச் 12

**பிரதமர் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆளும் கட்சிக் குழுக் கூட்டத்தில் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கம்மன்பில, விமல் பங்கேற்கவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

விமல் வீரவன்ஸ, கம்மன்பில ஆகியோருக்கு நீதி வேண்டும். அவர்களுக்கு நீதிகிடைக்கும் வரை அமைச்சுப் பணிகளை முன்னெடுக்கப் போவதில்லை என்று அறிவித்திருந்த அமைச்சர்வாசுதேவ நாணயக்காரவும் இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளார். சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மகிந்த அமரவீர உள்ளிட்டோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)



# சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு வருட நுழைவிசைவு

கொழும்பு, மார்ச் 12

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க, ஒருவருட நுழைவுவிசைவு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அறிவிப்பின் அடிப்படையில், புதிய நுழைவிசைவு நடைமுறைக்கு வரும்.

இதற்கு ஆண்டுக்கு 200 அமெரிக்க டொலர் செலவாகும்.

குறித்த நுழைவிசைவை வைத்திருப்பவர்களுக்கு ஒவ்வொரு முறையும் 90 நாள்கள் தங்கியிருப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-4-இ)

# இராஜகோபுர கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான இராஜ கோபுர கும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது என்று தேவஸ்தான நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர்.(ஒ-14)

# மத்திய கிழக்கு நாடுகளின் நாணயப் பெறுமதி உயர்வு

கொழும்பு, மார்ச் 12

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று வீதங்களின்படி மத்திய கிழக்கு நாடுகளின் நாணயங்களின் பெறுமதி உயர்ந்துள்ளது.

அதற்கமைவாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் திர்ஹாம் ஒன்றின் விற்பனை விலை 55.01 ரூபாவில் இருந்து 62. 48 ஆகவும், பஹ்ரைன் தினார் 536.00 இலிருந்து 608.69 ஆகவும், கட்டார் ரியால் 55.30 லிருந்து 62.96 ஆகவும் உயர்ந்துள்ளது. குவைத் தினார் ஒன்றின் விற்பனை விலை ரூ.665.21 இலிருந்து ரூ.755. 43 ஆகவும், ஓமானின்ரியால் ரூ.524.90 இலிருந்து 596. 09 ரூபாவாகவும், சவுதி ரியால் ஒன்றின் விலை 53.86 ரூபாவில் இருந்து 61.16 ரூபாவாகவும் உயர்ந்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 230 ஆக சரிவடைந்ததை அடுத்து இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது. (ஒ-4-இ)

# ஆட்சியைக் கைப்பற்ற இம்மியும் இடமில்லை!

## ஐ.ம.ச.க்கு ஆளுந்தரப்பு பதில்



கொழும்பு, மார்ச் 12

சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணி என்னதான் ஆட்டங்கள் போட்டாலும் ஆட்சியை ஒருபோதும் கைப்பற்றவே முடியாது என்று ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகம்மீது முட்டை வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை கேள்வி எழுப்பப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர்களின் வீடுகளைச் சுற்றிவளைப்பதற்கு ஹிருணிகா அழைப்பு விடுத்திருந்தார். அதனால்தான் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்துக்கே சிறிய கூட்டமொன்றை அனுப்பிவைத்தோம். எதிரணியால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைக்கு எங்களாலும் பதிலடி கொடுக்க முடியும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். எதிரணி என்னதான் ஆட்டங்கள் போட்டாலும் ஆட்சியை ஒருபோதும் கைப்பற்றவே முடியாது -என்றார். (ம)

# ஹெரோய்னுடன் கைதானோருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. 160 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் ஐவரை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இதன்போதே ஐவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஒ-14,23)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

கொடிகாமம், மார்ச் 12

எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணி நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் இடம்பெறவுள்ளது.

இந்தத் தடுப்பூசி வழங்கும் காலத்தில் வேறு தடுப்பூசிகளை இணைத்து வழங்குவது நாய்களின் உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (வ-159)

# தனித்து இயங்க முடிவு!

## நல்லூர் பந்தயப் புறாக்கள் கழகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

'பந்தயப் புறாக்கள் கழகம் யாழ்ப்பாணம்' (ப.பு.க.யா) என்னும் பதிவுசெய்யப்படாத அமைப்பில் இருந்து விலகி தனித்து இயங்கத் தீர்மானித்துள்ளோம் என்று நல்லூர் பந்தயப் புறாக்கள் கழகம் அறிவித்துள்ளது.

இதுவரை 'பபுகயா' என்ற அமைப்புடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டுவந்த தமது செயற்பாடுகள் இனிவரும் நாள்களில் தனித்து முன்னெடுக்கப்படும் என்றும் தமக்கும் 'பபுகயா' என்ற அமைப்புக்கும் தொடர்பில்லை என்றும் நல்லூர் பந்தயப் புறாக்கள் கழகத்தின் தலைவர் கே.நிஷாந்தன் தெரிவித்தார். நல்லூர் பந்தயப் புறாக்கள் கழகத்தின் செயலாளராக தீசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம)

# பொக்கணைக் காட்டுக்குள் கசிப்புக் காய்ச்சல் தீவிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

புத்தூர், பெரிய பொக்கணைக் காட்டுக்குள் கசிப்புக் காய்ச்சும் நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெறுகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு பொதுமக்கள் பலமுறை முறையிட்டும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதனால் கிராமத்தில் குடும்பங்களுக்குள் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவே இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-23)

# இலங்கையின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்குமாம் சீனா

கொழும்பு, மார்ச் 12

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த அமைச்சின் பேச்சாளர் சாவோ லீஜியாங்மே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது, சீனாவிடமிருந்து இலங்கை பெற்ற கடனை மீளச் செலுத்துவதை மறுசீரமைப்பது குறித்து பரிசீலிக்குமாறு சீன வெளிவிவகார அமைச்சரிடம் இலங்கை விடுத்த கோரிக்கை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் வினவினார்.

இதற்குப் பதிலளித்த ஊடகப் பேச்சாளர், இலங்கை அரசாங்கத்தினதும் மக்களினதும் முயற்சியுடனும் ஒத்துழைப்புடனும் நாட்டில் ஏற்பட்டுள்ள தற்காலிக நெருக்கடி நிலைமை விரைவில் வெற்றி கொள்ளப்படும். இதற்குச் சீனா தன்னால் முடிந்தளவு உதவிகளைச் செய்யும் -என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## குருவியின் தலையில் வெடிகுண்டு

**தே**ர்தல் முடிவுகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவருவதைப்போன்று நேற்றையதினத்திலிருந்து விலையேற்ற அறிவிப்புகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்தவண்ணமுள்ளன. பெற்றோல் **50** ரூபாவாலும், டீசல் **75** ரூபாவாலும், கோதுமை மா **35** ரூபாவாலும், பாண் **30** ரூபாவாலும் என்று அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் எகிறியிருக்கின்றன. தொடர்ந்தும் இன்னும் பல பொருள்களின் விலைகளும் அதிகளவு உயரப்போவதாக அபாய அறிவிப்புகள் வந்தவண்ணம் உள்ளன. விலையேற்றத்தை மட்டுமே போதும் போதும் என்ற அளவுக்கு மக்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கிவரும் கோத்தாபய அரசாங்கத்தின் ஆட்சியில் இது ஆச்சரியப்பட ஏதுமற்ற விடயம்தான். ஆனால், சகட்டுமேனிக்கு எகிறியிருக்கும் விலைகள் கொஞ்சம் நிலைதடுமாறவே வைக்கின்றன. எதிர்காலத்தின்மீது நிச்சயமற்ற தன்மையை இந்த விலையேற்றங்கள் தெளிவாகவே ஏற்படுத்தியுள்ளன.

எரிபொருளின் விலைகளில் ஏற்பட்ட எகிறல், அதனுடன் தொடர்புடைய அத்தனை தொழிற்றுறைகளிலும் ஆகப்பெரும் மாற்றத்தை சடுதியாக ஏற்படுத்தியுள்ளது. பேருந்துக்கட்டணங்களை அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முச்சக்கரவண்டி வாடகைக் கட்டணம் அதிகரிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அத்தோடு விலையேற்றம் நிகழ்ந்த மறுகணமே பல அத்தியாவசியப் பொருள்கள் சந்தைகளில் காணாமல் போயுள்ளன. ஆக, இவையெல்லாம் சேர்ந்து அன்றாடம் உழைத்துண்ணும் சமூகத்தின் வாழ்வில் பேரிடியாக இறங்கியுள்ளன.

அதேநேரம் இந்த விலையேற்றங்கள் இத்துடன் நின்றுவிடுமா என்று கேட்டால், இல்லை என்று அறுதியிட முடியும். ஏனெனில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப – தனிமனித பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த இந்த அரசாங்கத்திடம் திட்டங்கள் இல்லை. பொறிமுறைகள் இல்லை. கடன்களைப் பெறுதல், பொருள்களின் விலைகளை அதிகரித்தல் என்ற இரு தெரிவுகள்தான் கோத்தாபய தரப்பிடம் எஞ்சியுள்ளது. இந்த ஆகப்பெரும் மடமைத்தனத்தின் கேலிக்கூத்துக்களைத்தான் நாம் இன்று பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

கொரோனாவால் நாட்டின் பொருளாதாரம் சிதைந்துள்ளது. அந்நியச் செலாவணி குறைந்துள்ளது என்பதையெல்லாம் மறுப்பதற்கில்லை. ஆனால், இவை எல்லாவற்றையும் விட பொருளாதாரச் சரிவுக்கு மிக முக்கியமான காரணி கோத்தாபய அரசாங்கத்தின் தவறான அணுகுமுறைகளே. இந்தத் தவறுகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் என்ன செய்திருக்கவேண்டும்? சர்வதேசத்துடன் அரசாங்கம் நல்லுறவைப் பேணுகின்றதா? டொலரின் இருப்பைத் தக்க வைப்பதற்காக சர்வதேச வர்த்தகத்தைப் பலப்படுத்தியுள்ளதா? இல்லவேயில்லை. டொலரின் இருப்பைப் பேணுவதற்கு டொலருக்கு ஈடான ரூபாவின் நிகர்ப் பெறுதியை அதிகரிக்காமல் – தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பாமல் – கடன்களை மட்டும் வாரிக்குவிக்கின்ற கெட்டித்தனங்களைத்தான் இந்த அரசாங்கம் மாறி மாறி அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக ஒவ்வொரு தனிமனிதனுடைய பொருளாதாரமும் இடியப்பச் சிக்கல் போன்று அலங்கோலப்பட்டுள்ளது. கொரோனாவால் பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஒவ்வொரு வீட்டிலும் ஏற்பட்டுள்ளது. தனது வருமானத்தை உறுதிப்படுத்த – நிலைப்படுத்த – தக்கவைக்க இருக்கக்கூடிய அத்தனை வழிகளையும் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் சிந்தித்துக் கொண்டிருக்கையில் குருவியின் தலையில் வெடிகுண்டாக தாங்கமுடியாத பொருளாதாரத் திணிப்பை இந்த அரசாங்கம் ஒவ்வொருநாளும் மேற்கொள்கின்றது.

இந்த முரண் சிந்தனைகளால்தான் இன்று நாட்டுக்கு நாடு யாசகம் கேட்டுக் கையேந்தும் நிலையில் இந்தத் தீவு உள்ளது. இப்படியே சென்றால் இந்த நாட்டில் இருப்பதும் ஒன்றுதான் இறப்பதும் ஒன்றுதான் என்ற நிலைக்கு மக்கள் வந்துவிடுவார்கள். உரிய பொறிமுறைகளை விரைந்து ஏற்படுத்துங்கள், பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான அத்தனை வழிகளையும் தேர்ந்தெடுங்கள், சர்வதேசத்துடனான உறவைப் பலப்படுத்துங்கள், மக்களின் தலைகளில் சுமைகளை ஏற்றாதீர்கள். ஏனெனில் இனியும் தாங்க முடியாது என்னும் அளவுக்கு மக்கள் வதைபட்டுள்ளார்கள்.

நாளொரு நல்வார்த்தை

"ஒரு மனிதன் தனக்கு ஏற்கனவே தெரியும் என்று நினைப்பதைக் கற்றுக்கொள்வது சாத்தியமற்றது"
எபிக்டெட்டஸ்



# இறக்குமதிப் பொருள்களின் விலை இரட்டிப்பாகலாம்!

கொழும்பு, மார்ச் 12

**அமெரிக்க டொலரின் விற்பனை விலை 260 ரூபா வரை அதிகரித்துள்ளது. இரண்டு நாள்களுக்குள் டொலரொன்றின் விலை 58 ரூபாவால் அதிகரித்துள்ளது. இது 29 சதவீத அதிகரிப்பாகும். டொலரின் விலை அதிகரிப்பால், இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்துப் பொருள்களினதும் விலைகள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.**

ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 51 ரூபாவாலும் ஒரு லீற்றர் டீசலின் விலை 35 ரூபாவாலும் அதிகரிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. ஆனால், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் பெற்றோல் மற்றும் டீசல் விலையை ஏற்கனவே அதிகரித்துள்ளது.

12.5 கிலோகிராம் எடையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 824 ரூபாவால் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் சீனியின் விலை 44 ரூபாவாலும் ஒரு கிலோகிராம் பருப்பின் விலை 101 ரூபாவாலும் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 45 ரூபாவாலும் அதிகரிக்கப்படுவதற்கான சாத்தியமுள்ளது. (ஒ-இ)

# திரைப்படவிழாவில் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றுவரும் 7ஆவது யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்படவிழாவின் நான்காவது நாளான இன்று காட்சிப்படுத்தல்கள் மு.ப. 10 மணிக்கு டேவிட் போன்வில்லேயின் 'த லாஸ்ற் பாத்' எனும் போர்த்துக்கல் நாட்டின் அறிமுகத் திரைப்படத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேவாலயத்துக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த கன்னியாஸ்திரியான ஜோசபினா, பராமரிக்க யாரும் இல்லாமல் தவிக்கும் அவளுடைய பதினைந்து வயது மருமகனை தத்தெடுக்கின்றாள். இதன் விளைவாக ஏற்படும் சிக்கலான உணர்வுப் போராட்டத்தை இத்திரைப்படம் முன்வைக்கின்றது.

பி.ப. ஒரு மணிக்கு 'ரோக்கிங் எபவுற் ற்றீஸ்' எனும் பிரான்ஸிய சூடானிய ஆவணத் திரைப்படம் திரையிடப்படவுள்ளது. சூடானில் ஏற்பட்ட அடக்குமுறை ஆட்சியால் திரையரங்குகள் மூடப்பட்டதுடன் திரைப்படத் தயாரிப்பாளர்கள் நாடு கடத்தப்பட்டனர். சில ஆண்டுகளின் பின்னர் சூடானின் பழைய சினிமாவைப் புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபடும் நான்கு நண்பர்கள், அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் மற்றும் எதிர்ப்புக்கள், அவற்றை எவ்வாறு எதிர்கொள்கின்றார்கள் என்பது பற்றி இந்தத் திரைப்படம் பேசுகிறது.

பி.ப. 4.45க்கு திரையிடப்படவுள்ள 'நோற்றே டாமே டியூ நில்' திரைப்படமானது, 1973 இல் ஒரு கத்தோலிக்கப் பாடசாலையில் உள்ள மாணவர் விடுதியில் ருவாண்டாவைச் சேர்ந்த பெண்கள் சார்ந்து நடைபெறும் நிகழ்வுகளைச் சித்திரிப்பதுடன், அந்த நிகழ்வுகள் 1994 இல் ருவாண்டாவில் நடைபெற்ற உள்நாட்டுப்போரில் நிகழ்ந்த இன அழிப்புக்கு இட்டுச் சென்றதைப் பேசுகின்றது.

அத்துடன், நண்பகல் 12 மற்றும் பிற்பகல் 3.30க்கு விருதுக்காகப் போட்டியிடும் இலங்கை, இந்தியா, ரஷ்யா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் குறுந்திரைப்படங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (ஒ)

நாளை
13.03.2022
ஞாயிற்றுக்கிழமை
மாசி 29

சுபநேரம் : 09.22 - 10.52
ராகுகாலம்: 04.52 - 06.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மீனவர்கள் மீது இந்தியாவுக்கு திடீர்ப் பாசம்



**யாழ்ப்பாணம், மார்ச் 12**
**சீனத் தூதரகத்தால் வடக்கு மீனவர்களுக்கு நிவாரணப் பொதி வழங்கப்பட்டிருந்த நிலையில் இந்தியத் தூதரகமும் நிவாரணப் பொதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.**

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே யாழ்ப்பாணத்துக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை வருகை தரவுள்ளார்.
இதன்போது வடக்கு மாகாண மீனவர்களுக்கான இந்தியாவின் நிவாரணப் பொதி வழங்கலை அவர் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.
இலங்கைக்கான சீனத் தூதரகம் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதிகளை இரண்டு மாதங்களுக்கு முன்னர் வழங்கியிருந்தது.
இந்தநிலையில் இந்தியத் தூதரகம் 5 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான பொதியை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. (ஒ-இ)

## ஈச்சமோட்டையில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்புத்துறை ஈச்சமோட்டைப் பகுதியில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு நேற்று பொலிஸ் விசேட அதிரடிப்படையால் மீட்கப்பட்டது.
வீதியின் அருகே நீர்க்குழாய் பொருத்தும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஊழியர்கள் குழிவெட்டிய போது சந்தேகத்துக்கிடமான பொருள் இருப்பதை அவதானித்தனர். இதுதொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து விரைந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட பொருளை அவதானித்து கைக்குண்டு என்பதை உறுதிசெய்ததுடன் விசேட அதிரடிப்படையினரை வரவழைத்து கைக்குண்டை மீட்டனர். (ஒ-14-20,125)



படங்கள் - ஐ.சிவசாந்தன்

## 2022ஆம் ஆண்டுக்கான கல்விக்கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 12
2022ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணக் கல்விக் கண்காட்சி வலம்புரி ஹோட்டலில் நேற்று இடம்பெற்றது. உயர்தரக் கல்வியை நிறைவுசெய்தவர்களுக்கு தொழில்முயற்சிக்கான வழிகாட்டலை வழங்குதல் இந்தக் கண்காட்சியின் நோக்கமாகும். இதில், வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ். மத்திய கல்லூரி அதிபர் எ.எழில்வேந்தன் மற்றும் அரச, தனியார் துறைசார்ந்த கல்விக்கான துறைசார் நிபுணர்கள், பிரதிநிதித்துவ அலுவலர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ-இ)

## எரிபொருள் நெருக்கடி தீர இந்தியா கைகொடுக்குமாம்

### தூதுவர் மொரகொடவிடம் இந்திய அமைச்சர் உறுதி



கொழும்பு, மார்ச் 12
இலங்கையின் பெற்றோலிய நெருக்கடி நிலைமையை வெற்றிகொள்ள தொடர்ந்தும் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் என்று, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொடவிடம், இந்திய பெற்றோலியத்துறை அமைச்சர் ஹர்டீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.
இருவருக்கும் இடையிலான சந்திப்பு புதுடில்லியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே இந்திய அமைச்சர் உறுதியளித்துள்ளார். இலங்கையின் எரிபொருள் பிரச்சினைத் தீர்வுக்காக இந்தியா ஏற்கனவே வழங்கிய 500 மில்லியன் டொலர் உதவிக்கும் மிலிந்த மொரகொட இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.
இந்திய அமைச்சர் ஹர்டீப் சிங் இலங்கைக்கான இந்தியத் தூதுவராகச் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

## கொடுப்பனவுக்காக ஏங்கும் ஓய்வூதியர்கள்

சாவகச்சேரி, மார்ச் 12
ஓய்வூதியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கடந்த 3 மாதங்களாக தென்மராட்சிப் பிரதேசத்தில் ஓய்வூதியம் பெறும் 166பேருக்கு வழங்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் தெரிய வருவதாவது:
அரசாங்கத்தின் அறிவிப்பின்பிரகாரம் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் ஓய்வூதியர்களுக்கான அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படுகின்றன. ஆனால் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஓய்வூதியம் பெறுவோரில் 166 பேருக்கு குறித்த கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை.
இது தொடர்பில் ஓய்வூதியத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, கணினியில் ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறு காரணமாக சில ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. ஓய்வூதியம் கிடைக்காதவர்களின் விவரங்கள் பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. தரவுகள் சீர்செய்யப்பட்டு மார்ச் மாத ஓய்வூதியத்துடன் நிலுவையும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், குறித்த ஓய்வூதியர்களுக்கு மார்ச் மாதத்திலும் அதிகரித்த கொடுப்பனவு கிடைக்கவில்லை.
இதையடுத்து பிரதேச செயலக ஓய்வூதியக்கிளையுடன் தொடர்புகொண்டபோது, ஓய்வூதியத் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட அதிகரித்த ஓய்வூதியம் கிடைக்காதவர்களின் பட்டியல் சீர்செய்யப்பட்டு மார்ச் மாத முற்பகுதியில் அனுப்பப்பட்டது எனவும் ஏப்ரல் மாதம் நிலுவையுடன் அதிகரித்த ஓய்வூதியம் கிடைக்கும் என்றும் தெரிவித்தனர். (வ-9)

## மணிமேகலை பிரசுரத்தின் புத்தகங்களின் வெளியீடு

### அதிதியாக சரவணபவன்




சென்னை, மார்ச் 12
45ஆவது சென்னை புத்தத் திருவிழா கடந்த மாதம் நடைபெற்ற நிலையில், அதில் கடந்த 27ஆம் திகதி மணிமேகலைப் பிரசுரத்தின் 45 நூல்கள் வெளியிடப்பட்டன. இந்த நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வாழ்த்துரை வழங்கினார்.
மணிமேகலைப் பிரசுரத்தின் நிர்வாக இயக்குநர் ரவி தமிழ்வாணன் ஒருங்கிணைப்பில் சென்னை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நடந்த இந்த நிகழ்வு இரு பகுதிகளாக நடைபெற்றது. முதல் பகுதி சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் பா.புகழேந்தி தலைமையிலும், இரண்டாம் பகுதி சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் வீ.பாரதிதாசன் தலைமையிலும் நடைபெற்றன.
இந்த நிகழ்வில் தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழ்நாடு முன்னாள் அமைச்சர் ..., இலங்கை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், திரைப்பட இயக்குநர் கஸ்தூரிராஜா, இயக்குநர் பாண்டியராஜ், நடிகர்களான மதன்பாப், வையாபுரி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் மணிமேகலை பிரசுரத்தின் 45 நூல்கள் வெளியிடப்பட்டன. நூல்களை விருந்தினர்கள் பெற்றுக்கொண்டனர். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனாத் தொற்று

பீஜிங், மார்ச் 12

வடகிழக்கு சீனாவில் உள்ள ஜிலின் மாகாணத்தில் கடந்த இரண்டாண்டுகளில் இல்லாதளவு அதிகளவில் கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இதனால் அந்த மாகாணத்தில் முழுமையாக ஊரடங்கு பிறப்பிட்டுள்ளது எனவும் சீனா அறிவித்துள்ளது.

உலகில் முதன்முதலாகச் சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டு அதனைத் தொடர்ந்து பல நாடுகள் தற்போதும் கொரோனாவால் போராடிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் வடக்கு - கிழக்கு சீனாவிலுள்ள ஜிலின் மாகாணத்தில் ஒரேநாளில் சுமார் ஆயிரம் தொற்றாளர்கள் வரையில் பதிவாகியதால் அங்கு ஊரங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது என சீன அரசு தெரிவித்துள்ளது. (ச-இ)

# குழுக்களிடையே மோதல் மூவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், மார்ச் 12

இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் மூவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குடும்பத் தகராறே குழுமோதலாக மாறியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

அராலி மத்தியை சேர்ந்த நபர் ஒருவர் காங்கேசன்துறையைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்து வாழ்க்கை நடத்தி வந்துள்ளார். தம்பதியரிடையே முரண்பாடு ஏற்பட்டதில் கணவன் அராலியில் உள்ள தனது வீட்டிலும், மனைவி காங்கேசன்துறையில் உள்ள தனது தாயாரின் வீட்டிலும் தங்கியிருந்தனர்.

தனது அக்காவுடன் அத்தான் முரண்பட்டதால் கோபமடைந்த தம்பி அராலியில் உள்ள அத்தானின் வீட்டுக்குச் சென்று அத்தானின் மீதும் இன்னொருவர் மீது தாக்குதல் நடாத்தியுள்ளார். அவர்களும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல்களில் மூவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூன்று பேர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-27)

# பொருளாதாரத் தடைகளை மீறி ரஷ்யா மீண்டும் எழும்

மொஸ்கோ, மார்ச் 12

ரஷ்யாவுக்கு எதிராக மேற்கு நாடுகள் விதித்த பொருளாதாரத் தடைகளைத் தகர்த்து மொஸ்கோ மீண்டும் எழும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.

உக்ரைனை ரஷ்யப் படைகள் ஆக்கிரமித்து இரண்டு வாரங்கள் கடந்த நிலையில் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே புடின் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஷ்யா மீது மேற்குலக நாடுகள் விதித்த உணவு மற்றும் எரிசக்தி தடைகளை உடைத்து வலுவானதாக வெளிப்படுவோம்.

மேலும் குறுகிய கால பொருளாதார ஆதாயத்துக்காகத் தனது இறையாண்மையை சமரசம் செய்வதை ஏற்றுக்கொள்ளும் நாடு அல்ல ரஷ்யா. ஐரோப்பாவின் எரிவாயுவில் மூன்றில் ஒரு பங்கை வழங்கும் ஒரு பெரிய எரிசக்தி உற்பத்தி நாடு ரஷ்யாவே.

எமது எண்ணெயை அமெ ரிக்கா உள்ளிட்ட நாடுகள் தடைசெய்து பொருளாதாரத் தடையை விதித்தால் அதன் பலனை மேற்கு நாடுகளே சந்திக்க வேண்டியேற்படும்- என்றார். (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனஉளைச்சல் நீங்கி நிம்மதி கிடைக்கும். கலகலப்புக் கூடும். நீங்கள் வாழ்வில் முன்னேறுவீர்கள். புதியவர்களிடம் கவனம் தேவை. பிறரால் வந்த பிரச்சினை தீரும். மனதில் அமைதி பிறக்கும்.

**இடபம்:** நினைத்த வேகத்தில் முக்கியமான பணிகளை முடிப்பீர் கள். நீண்டநாள் தடை நீங்கும். பிள்ளை கள் மூலம் சந்தோஷம் கிடைக்கும் . விரும்பிய செய்திகள் வந்து சேரும் .

**மிதுனம் :** சுபச் செலவுகள் அதிகரிக்கும். மனநிறைவான நாள். மனதிலுள்ள கற்பனைப் பயம் நீங்கும். எதிர்ப்புகளை வெல்வீர்கள். செயல்களில் சுறுசுறுப்பு அதிகரிக்கும்.

**கடகம்:** சமயோசித புத்தியால் வாழ்வில் நல்ல திருப்பம் உண்டாகும். எதிர்பார்த்த நன்மைகள் சற்றுக் கால தாமதமாகி இன்று கிடைக்கும்.பொறுமைக்குத் தகுந்த பரிசு கிடைக்கப் பெறுவீர்கள்.

**சிம்மம்:** செலவுகள் குறையும். தயவான எண்ணங்கள் மேன்மேலும் அதிகரிக்கும். உங்கள் உறவினர், நண்பர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் முடிவுக்கு வரும். கருத்து வேறுபாடு உண்டாகலாம்.

**கன்னி:** வாழ்வில் வெளிச்சம் தென்பட ஆரம்பிக்கும். புகழ்கூடும். கடின முயற்சியின் பலனாக நிறைய நன்மைகள் உண்டாகும். நிதானம் தேவை. மனதுக்கு அமைதி கிடைக்கும்.

**துலாம்:** முயற்சியின் பேரிலேயே அனைத்து செயல்களும் வெற்றி பெறும். வியாபார விஷயத்துக்காக அதிகம் உழைப்பீர்கள். இலாபம் வந்து சேரும். தாமதமாகிக் கொண்டிருந்த பணம் கிடைக்க வாய்ப்பு இன்று அதிகம் .

**விருச்சிகம்:** எவருக்கும் பரிந்துரை செய்யாதீர்கள். முன்கோபத்தைத் தவிர்க்கவேண்டும். கடனாக, கைமாற்றாக பணம் வாங்கவோ, கொடுக்கவோ வேண்டாம். உழைத்த நற்பலன் கிடைப்பதால் சிரமம் மறையும்.

**தனுசு:** இன்று அமைதியாகச் செயற்பட்டால் நற்பலன் கிடைக்கும். சுய தேவையை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களால் உதவி உண்டு. தொழில் தொடர்பான சந்திப்புகள் நற்பலனை அளிக்கும்.

**மகரம்:** திட்டங்களை ரகசியமாக வைத்துக் கொண்டு சாதனை புரிவீர்கள். பொருளாதார சிக்கல் மறையும். குடும்பத்தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தில் சின்னச் சின்ன விஷயங்களால் மனமகிழ்ச்சி ஏற்படும். வியாபாரம் தொடர்பாக நண்பர்களுடன் நெடுந்தூரம் பயணம் செல்ல நேரிடலாம். போட்டிகள் தானாக விலகும்.

**மீனம்:** தொழிலாளர்கள் மேலதிகாரியை அனுசரித்துச் செல்வதால் நன்மை கிடைக்கும். சகபணியாளர்களால் உங்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்துக்கு மகிழ்ச்சியான நாள். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள்.

## தவக்காலச் சிந்தனை

# எம் வாழ்வே இயேசுவின் அடையாளம்

இயேசுவைப் புரிந்துகொள்ளவும் நம்பிக்கை கொள்ளவும் சில அடையாளங்களை எதிர்பார்க்கின்றோம். ஏரோது அரசன், கைதியாக நின்ற இயேசுவிடம் புதுமைகள், அற்புதங்கள், வீரதீரச் செயல்கள் ஏதாவது புரிந்து இறைமகன் என்ற அடையாளத்தை நிரூபிக்குமாறு கேட்டான்.

உலகின் முரண்பாடுகளுள் ஒன்று அடையாளங்களை வைத்துக்கொண்டே அடையாளங்களைத் தேடுவது. எம் வாழ்வின் ஒவ்வொரு நாளும் இறை இரக்கத்தின் அடையாளம் தான் என்பதை மறந்து விடுகின்றோம்.

காலையில் விழித்தெழும்போது நாம் உயிருடன் இருப்பதே இறைவனின் பேரிரக்கமும் அற்புதமும்தான் என்பதை உணரத் தவறுகின்றோம். அன்று முழுவதும் கடவுள் நம்மோடு உடனிருந்து வழிநடத்துவதை உணர்ந்து நன்றி செலுத்தத் தவறுகின்றோம்.

உண்ண உணவு, உடலை மறைக்க உடை, குடும்பம், உறவுகள், இயற்கை வளங்கள் அனைத்தும் இறைவனின் அடையாளங்களே. நம் வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் இறைவன் தரும் அடையாளங்களால் நிறைந்துள்ளது என்பதை உணர்ந்து நன்றியின் சாட்சிகளாக வாழ்வோம்.

மானிடவாழ்வு எப்போது தேக்கமடைந்து வலுவிழந்து போகிறதோ, அப்போது இயக்க ஆற்றலாக ஆர்ப்பரித்துப் பாயும் உன்னத சக்தியே இயேசுவின் அடையாளம். மக்களைப் பிரித்தாளும் வஞ்சகப் பாடுபாடு நடைபெறுகிறதோ அதற்கெதிராக ஒருங்கிணையும் போராட்டமே இயேசுவின் அடையாளம். நீதிக்காக உயர்ந்தெழும் குரலே இயேசுவின் அடையாளம். மனச்சான்றை மதித்து வாழ்வதே இயேசுவின் அடையாளம். இதுவே தவக்காலத்தின் அடையாளம்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை

# உக்ரைன் ஆய்வகங்களில் உள்ள ஆபத்துக் கிருமிகளை அழியுங்கள்

***உலக சுகாதார நிறுவனம் வேண்டுகோள்***

ஜெனிவா, மார்ச் 12

ரஷ்யப் படைகளால் உக்ரைன் தாக்கப்பட்டுவரும் நிலையில், அச்சுறுத்தலான நோய்ப் பரவலைத் தடுத்திடும் வகையில் உக்ரைனிலுள்ள சுகாதார ஆய்வகங்களிலுள்ள ஆபத்தான நோய்க்கிருமிகளை அழிக்குமாறு உக்ரைனுக்கு உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

ரஷ்யத் தாக்குதலில் உக்ரைனின் சுகாதார ஆய்வகங்கள் எவையேனும் தாக்கப்பட்டால், அங்கிருந்து அச்சுறுத்தலான நோய்களைப் பரப்பும் கிருமிகள் வெளியேறுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன எனச் சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்தநிலையில், உக்ரைனின் சுகாதார ஆய்வகங்களில் உள்ள ஆபத்தான நோய்க் கிருமிகளை அழித்துவிடுமாறு உக்ரைனுக்கு உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலியை அறுத்த சந்தேகநபர்கள் கைது

ஆசிரியையின் சங்கிலியை அறுத்த இரு சந்தேக நபர்கள் கடந்த 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கெற்பேலி வன்னியர் கோவில் பகுதியில் கடந்த 9 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற ஆசிரியையின் சங்கிலி அறுக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டுக்கமைய அன்றைய தினமே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.
அவர்களால் பல இடங்களில் சங்கிலிகள் அறுக்கப்பட்டன என்பதும் தெரியவந்தது.
சந்தேகநபர்களால் அடகு வைக்கப்பட்டிருந்த ஆசிரியையின் சங்கிலியும், மிருசுவில், நெல்லியடி, தவசிகுளம் ஆகிய இடங்களில் திருடிய சங்கிலிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14-159)

## போதைப்பொருளுடன் கைது: இளைஞருக்கு புனர்வாழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 12
ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான இளைஞரை ஒரு வருடம் புனர்வாழ்வுக்குட்படுத்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.
குருநகர் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது.
ஹெரோய்ன் போதைப்பொருள் குற்றச்சாட்டில் இளைஞர் 3 தடவைகள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டார்.
இந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.
இதனையடுத்து அவரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போதே ஒரு வருடம் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி சிகிச்சை வழங்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஒ-14-23)

## பாம்புதீண்டலுக்கு உள்ளாவோர் தென்மராட்சியில் அதிகரிப்பு

சாவகச்சேரி, மார்ச்.12
தென்மராட்சிப் பிரதேசத்தில் பாம்பு தீண்டலுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.
அதிகரித்த வெப்பம் மற்றும் நெல் அறுவடைக்காலம் நிறைவடைந்தமையால் பாம்புகள் குடியிருப்புகளுக்குள் நுழைய ஆரம்பித்துள்ளன.
இதனால் பாம்பு தீண்டலுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
பொதுமக்கள் இரவு வேளையில், வெளியில் நடமாடும்போது ரோர்ச் வெளிச்சத்துடன் நடமாடுமாறும், பாம்பு தீண்டலுக்கு உள்ளாவோரை உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்குமாறும் சுகாதாரத் தரப்பினர் அறிவித்துள்ளனர். (வ-9)

# கடற்படை வசமுள்ள காணி விடுவிக்கப்படவேண்டும்

**கிளிநொச்சி, மார்ச் 12**

**கிளிநொச்சி முழங்காவில் அன்புபுரம் இறங்குதுறையை அண்மித்த பகுதிகளில் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள ஆயிரத்து 197 ஏக்கர் காணி விடுவிக்கப்பட வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



இது தொடர்பிலான சந்திப்பு இறங்குதுறைப்பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.
இதில் அந்தப் பகுதிக்கான கிராம அலுவலர், முழங்காவில் பங்குத் தந்தை, பூநகரி பிரதேச சபைத் தவிசாளர், கடற்படை அதிகாரிகள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.
இதன்போது, கடற்படையினரின் கண்காணிப்புப் பணிக்கான காணிக்கோரிக்கைக்கு கடும் எதிர்ப்பை மக்கள் வெளிப்படுத்தியதுடன், கடற்படையின் செயற்பாடுகளால் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் இடையூறுகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது. (வ-13)



# இழுவைமடித் தொழிலை ஊக்குவிக்கவேண்டாம்!!!

## கடற்றொழில் திணைக்களம் சங்கங்களுக்கு அறிவுறுத்தல்

அடித்தள இழுவை மடியைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழில் செய்தல் 2017ஆம் ஆண்டிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளது. இவ்வகையான தொழில் முறையை அபிவிருத்தி செய்யவோ ஊக்குவிக்கவோ வேண்டாம்.
எனவே மாற்றுத் தொழிலுக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும் என்று மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மன்னார் மாவட்ட உதவிக் கடற்றொழில் பணிப்பாளர் சந்திரநாயக்க எழுத்து மூலமாக அறிவித்தல் வழங்கியுள்ளார். மன்னார் மாவட்டத்தில் அடித்தள இழுவை மடியைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.
2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டத்தின் அடிப்படையில் இந்தத் தொழில் தடைசெய்யப்பட்டுள்ளது.
இந்தத்தொழில் தொடர்பாக தங்களது கிராமங்களில் இவற்றை ஊக்குவிக்கவோ அல்லது புதிதாக மீனவர்களை ஈடுபடுத்தவோ அத்துடன் இவ்வகையான தொழில் முறையை அபிவிருத்தி செய்யவோ வேண்டாம் என மன்னார் மாவட்டத்திலுள்ள பள்ளிமுனை, பேசாலை, தோட்டவெளி, புனித பீற்றர் மற்றும் தலைமன்னார் புனித லோறன்ஸ் மீனவர் கிராமிய அமைப்புக்களுக்கும் பேசாலை, பெரியகரிசல், பள்ளிமுனை, தலைமன்னார் மேற்கு மற்றும் தோட்டவெளி மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றும் மன்னார், எருக்கலம்பிட்டி, பேசாலை கடற்றொழில் பரிசோதகர்களுக்கும் இந்தத் தகவல் அனுப்பப்பட்டுள்ளது. இழுவைப்படகுத் தொழிலுக்கு மாற்றீடாக வேறு எவ்வகையான தொழிலை மேற்கொள்ள முடியும் அல்லது நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கும் தொழிலாளர்கள் அவற்றை மன்னார் கடற்றொழில் திணைக்களத்துக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்கவும் வேண்டப்பட்டுள்ளனர். (ஒ-60)

## திறப்பு விழா

சாவகச்சேரி, மார்ச் 12
சாவகச்சேரி உதயசூரியன் முன்பள்ளிச் சிறார்களுக்கு அமைக்கப்பட்ட விளையாட்டு முற்றம் அடுத்த வாரம் திறக்கப்படவுள்ளது.
சாவகச்சேரி நகரசபையின் கோவில் குடியிருப்பு வட்டார உறுப்பினர் பௌலினா சுபோதினியின் ஏற்பாட்டில், புலம்பெயர்ந்தவரின் நிதிப் பங்களிப்பில் குறித்த முற்றம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. (ஒ-14-9)

## சர்வதேச மகளிர் தினமும் பெண்கள் மதிப்பளிப்பும்

நல்லூர் பிரதேச சபையின் சர்வதேச மகளிர் தின விழாவும் சாதனைப் பெண்கள் மதிப்பளிப்பும் எதிர்வரும் 15 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வு பிரதேசசபை உறுப்பினர் கௌசலா சிவா தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் முதன்மைப் பெண்களாக பேராசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன், யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் சுலோச்சனா முருகநேசன், நல்லூர் பிரதேச செயலர் எழிலரசி அன்ரன் யோகநாயகம், நல்லூர் மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி சுஜீபா சிவதாஸ், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோசலா மதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-14-9)

# மகளிர் தின விழா



"நிலைபேறான எதிர்காலத்துக்காக இன்றே பால்நிலை சமத்துவத்துக்காக போராடுவோம்" எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தின விழா நேற்றுமுன்தினம் மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.
இதன்போது பெண்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதாரப் பிரச்சினைகள், குடும்ப அடக்குமுறைகளிலிருந்து எவ்வாறு மீள்வது, தற்சார்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி ஆரோக்கியமான சமுதாயத்தை நிலைநாட்டல் ஆகியன தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. மெசிடோ நிறுவனத்தின் நிதி அனுசரணையில் மன்னார் மாவட்ட பெண்கள் விழிப்புணர்வு சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ஒ-14-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்விக்குக் காரணமானவர்கள் பொருளாதாரப் பேரவையில்!

ஜே.வி.பி. விசனம்

கொழும்பு, மார்ச் 12
நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமானவர்களே பொருளாதாரப் பேரவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை முன்னுதாரணம் காட்டியும் உரையாற்றினார்.

நாட்டில் நிலவும் எரிசக்திப் பிரச்சினை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியினரால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீது நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்தின் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்கு ஐவர் அடங்கிய குழுவை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நியமித்துள்ளார்.

இந்த ஐவரும் பேராசிரியர்கள். இவர்களில் ஒருவர் நோபல் பரிசு பெற்றவர். எனினும் எமது நாட்டின் பொருளாதாரப் பேரவையில் உள்ளவர்களுக்கு என்ன பட்டம் உள்ளதென்று எனக்குத் தெரியாது.

இந்தக்குழுவில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனை வைத்தே நாட்டின் பொருளாதார நிலைமைகளுக்கு அரசு என்னமாதிரியான பதிலை வழங்கும் எனத் தெரிகிறது.

இந்தக்குழுவில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவும் இருக்கிறார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் ஊடாக பஸில் ராஜபக் சவின் இயலாமையே வெளிப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் மீண்டும் இவர்களே இந்தக்குழுவில் இருப்பதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை -என்றார். (ஒ-இ)

# ஜனாதிபதித் தேர்தல் முறைமை இனி இல்லாதொழிக்கப்படலாம்

விமல் ஆருடம்



கொழும்பு, மார்ச் 12

**இனி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறமுடியாது என்பது இந்த ஆட்சியாளர்களுக்குத் தெரியும். அதனால் புதிய அரசமைப்பு ஊடாக அந்தத் தேர்தல் முறைமை இல்லாது செய்யப்படலாம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனிப்பட்ட இலக்குகளை அடைவதை நோக்காகக்கொண்டது அல்ல எனது அரசியல் பயணம். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாட்டு மக்களின் பக்கம் நின்றே தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிர்பார்ப்பு என்னிடம் இல்லை.

இனியொரு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா என்பதும் தெரியாது.

ஏனெனில் புதிய அரசமைப்பு ஊடாக ஜனாதிபதித் தேர்தல் முறைமையை ஒழிப்பதற்குக்கூட நடவடிக்கை எடுக்கப்படலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் இனி வெற்றிபெற முடியாது என்பது ஆட்சியாளர்களுக்குத் தெரியும். அதனால் தமக்கு ஏற்ற விதத்திலான தேர்தல் முறைமையை உருவாக்கிக்கொள்வதற்கு முயற்சிக்கின்றனர்.

மாகாணசபைத் தேர்தல் முறைமை கூட தமக்குச் சாதகமான வகையிலேயே ஆளும்கட்சியால் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது 35 வீத வாக்குகளைப் பெறும் தரப்பு வெற்றி என்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏனைய தரப்புகள் இணைந்து அதைவிட அதிக வாக்குகளைப் பெற்றிருந்தால்கூட வெற்றி 35 வீதம் உள்ள பக்கத்துக்கே.

இப்படியான நகர்வுகள் வேறு எங்கும் நடப்பதில்லை -என்றார். (ஒ-44)

## வடமராட்சியில் விபத்து ஆறு பேருக்குக் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 12
வடமராட்சி மாலுசந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியும், நெல்லியடி நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே மேற்படி விபத்துச் சம்பவித்துள்ளது. இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)

## மக்களை ஏமாற்றுவதற்கான அரசியல் குண்டே சர்வகட்சி மாநாடு



கொழும்பு, மார்ச் 12
சர்வகட்சி மாநாடென்பது மக்களை ஏமாற்றும் அரசியல் குண்டாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகள் இந்த அரசாங்கத்திடம் இல்லை. விமல் வீரவன்ஸ, கம்மன்பில போன்றவர்களின் நகர்வுகள்கூட நாடகம்தான். அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்பட்டாலும் இருவரும் இன்னும் அரசாங்கத்தில் இருந்து விலகவில்லை.

நாட்டில் இதற்கு முன்னரும் சர்வகட்சி மாநாடுகள் இடம்பெற்றுள்ளன. நடந்தவைதான் என்ன? எனவே, இப்படியான மாநாடுகள் மக்களை ஏமாற்றுவதற்கான அரசியல் குண்டாகும் -என்றார் சரத் பொன்சேகா.

அதேவேளை, சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் இன்னும் முடிவெடுக்கவில்லை. அது பற்றி ஆராயப்பட்டுவருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலர் அறிவித்துள்ளார். (ஓ-44)




கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய



பங்குனி உத்தரப் பொங்கல் 18.03.2022

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பங்குனி உத்தரப்பொங்கல் எதிர்வரும் (11.03.2022) வெள்ளிக்கிழமை விளக்குவைக்கும் வைபவத்துடன் ஆரம்பமாகி (18.03.2022) வெள்ளிக்கிழமை பொங்கல் உற்சவம் பகல், இரவாக சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

- 11.03.2022 விளக்கு வைக்கும் நாளிலிருந்து அடியார்கள் நேர்த்திகளை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- விசேட போக்குவரத்து சேவைகள் அனைத்தும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- பண்டம் வழமை போன்று மீசாலை, புத்தூர் சந்தி பண்ட மரவடி வரை சென்று வருவதுடன் வழமையான விடயங்கள் அனைத்தும் அங்கு இடம் பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.
- ஆலயக்கொடிகளுடன் உழவு இயந்திரத்தில் வருபவர்களுக்கு மட்டும் தண்டல் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வேறு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.
- ஆலயத்திற்கு வருபவர்கள் தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்க்கவும்.
- அனைத்து அடியார்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பரிபாலன சபை, நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை.

(CR 8023B) (4/6)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

க.பொ.த (உ/த) 2021 பரீட்சைகளிற்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

இறுதிப்பிரிவு 37

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singala
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling

■காலம்:- 3 மாதங்கள் ■சான்றிதழ் வழங்கப்படும்.

ஆரம்பம்:
19/03/2022 , 10.00AM

குறிப்பு

- மாணவர்கள் விரும்பியகற்கைகளை தொடர முடியும்.
- அச்சடித்த பாடக்குறிப்புகள்
- மாதாந்த மதிப்பீடுகள்.

IPS to Your Future

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 434 0229
076 685 2529
Email- degreeinfo21@gmail.com


# ஹிருணிகா குடும்பத்தினரை பின்தொடரும் மர்ம நபர்கள்!

கொழும்பு, மார்ச் 12

மோட்டார் சைக்கிள்களில் வரும் முகமூடி அணிந்த நபர்களால் தானும் தனது குடும்பத்தினரும் பின்தொடரப்படுவதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர, தமது தொலைபேசியும் ஒட்டுக் கேட்கப்படுவதாகவும் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மிரிஹானவில் உள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் இல்லத்துக்கு முன்பாக மகளிர் அணியினரால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த தான் உட்பட சிலரைக் கைது செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் எச்சரித்ததாக ஹிருணிக்கா முன்னர் குற்றஞ்சாட்டினார்.

"எனது குழந்தைகள் மிகவும் சிறியவர்கள். பாடசாலைக்குச் செல்லும் வழியில் சிலர் மோட்டார் சைக்கிள்களில் குழந்தைகளைப் பின்தொடர்வதைத் நாங்கள் அவதானித்தோம்.

மேலும், கடந்த புதன்கிழமை திருமண வைபவமொன்றுக்கு நான் சென்றிருந்த போது, எனது வாகனத்துக்குப் பின்னால் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் பின் தொடர்ந்தன.

என்னுடையது மட்டுமன்றி, எனது கணவரின் தொலைபேசியும் ஒட்டு கேட்கப்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியும்.

அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்ட மானது, ஒரு தரப்பினரால் மட்டுமின்றி ஒட்டுமொத்த பெண்களாலும் நடத்தப்பட்டது என்பதை ஜனாதிபதி நினைவில் கொள்ளவேண்டும்.

நாட்டின் தலைவரிடம் பதில் கேட்க அமைதியான போராட்டம் மட்டுமே செய்யப்பட்டது. அது தவறா? மேலும், போராட்டத்துக்கு வந்த பெண்களும் தற்போது ஆபத்தில் உள்ளனர். அவர்களுக்கும் குழந்தைகள் உள்ளதுடன், அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது - என்று குறிப்பிட்டார். (ஓ-இ)


**வாடகைக்கு உண்டு**

திருநெல்வேலியில் Room வாடகைக்கு உண்டு. பெண்களுக்கு மட்டும்.

(CS 18823) (4/6) 077 112 0314

**வேலைவாய்ப்பு**

கிளிநொச்சியில் உள்ள பிரபலமான சிற்றுண்டிச்சாலைக்கு சமையல் ஆட்கள் தேவை.

(CR 37619) (4/6)

தொடர்புக்கு:-
Mr.Sampath:- 077 173 9382
Mr.Vinoth:- 077 289 1038

கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய
பங்குனி உத்தரப் பொங்கல் - 2022



# வர்த்தக நிலையங்களை ஏலத்தில் வழங்கல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 18.03.2022 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. உற்சவகால வியாபார நடவடிக்கைகளுக்காக கடைகள் ஏலத்தில் விடுதல் எதிர்வரும் 13.03.2022ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறும். வியாபாரம் மேற்கொள்ள விரும்பும் வர்த்தகர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CR 8023A(4/6)) ஆலய பரிபாலன சபை, நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை.


# தலையில் காயங்களுடன் மன்னாரில் சடலம் மீட்பு!

தலையில் படுகாயமடைந்த நிலையில், மன்னார் கீரிப்பகுதியில் இருந்து நேற்று நண்பகல் பெண் ஒருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

அந்தோனிப்பிள்ளை மரியசீலி (வயது 56) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மாதாந்த கிளினிக்குக்காக மருத்துவமனைக்குச் சென்றவர் கிளினிக்கை முடித்து மீண்டும் வீதியால் நடந்து சென்றபோதே இந்த இறப்புச் சம்பவித்துள்ளது. வீதியில் அலறல் சத்தம் கேட்டதையடுத்து அயலிலுள்ளோர் வீதிக்கு வந்து பார்த்தபோது பெருமளவு குருதி வெளியேறிய நிலையில் அவர் சடலமாகக் கிடந்துள்ளார்.

குறித்த பெண் நகைகளை அணிந்து சென்ற காரணத்தால், அவற்றைக் கொள்ளையிடுவதற்காக அந்தப் பெண் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம288)


# மரண அறிவித்தல்

தோற்றம் 22 - 01 - 1970



மறைவு 10 - 03 - 2022

## சுந்தரலிங்கம் சாந்தலிங்கம் (சாந்தன்)

கோண்டாவில் வீதி கோப்பாய் தெற்கு கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சாந்தலிங்கம் (சாந்தன்) அவர்கள் கடந்த (10.03.2022) வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் இராசமலர் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற செல்லையா காமாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகனும், ரஞ்சினியின் அன்புக்கணவரும், கிரிசாந் (சாந்தன் சன்ஸ்- KTP ஸ்ரோர்ஸ்), துஸ்நீபன், பிரியங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், டெய்சிராணி (வவுனியா), உதயராணி (பிரான்ஸ்), உசாராணி (பிரான்ஸ்), சத்தியலிங்கம் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வசந்தராசா, யோகராசா (பிரான்ஸ்) காலஞ்சென்ற கமலேஸ்வரன் (பிரான்ஸ்), செல்வராசா, ராதா, பாப்பா, சரஸ்வதி, ரதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கிருஸ்ணசாமி மற்றும் சிவலிங்கம், நந்தகோபால் ஆகியோரின் சகலனும், காலஞ்சென்றவர்களான ஜெயக்கிருஸ்ணா, கிருஸ்ணவேணி மற்றும் வசிகரன், கிருஸ்ணகுமாரி, கிருஸ்ணமோகன், டசிந்தா, துஷ்யந்தன், திவாகரன் ஆகியோரின் சித்தப்பாவும், தினேஸ்குமார், டிலக்ஸ்குமார், ரிவாசன், விஜோஜினி, சுபீட்சனா, கோகிலா, விதுஷா, பிரசாந் ஆகியோரின் பெரியப்பாவும், பவிசன், துஷாந் (பிரான்ஸ்), நர்மதா (பிரான்ஸ்), நிவேதா (பிரான்ஸ்), பெலிக்ஸா (பிரான்ஸ்), அஜித் (பிரான்ஸ்), அபிராமி, அபிராஜிதன், அகழ்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், மதிவாணி, துருவன், தபிசன், தேசப்பிரியன் ஆகியோரின் அன்புத்தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டைப்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(கிரிசாந் சாந்தன் சன்ஸ், KTP ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)
077 941 1382, 076 682 7793

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

மலர்வு 05 - 05 - 1943



உதிர்வு 11 - 03 - 2022

அமரர்

## தாமோதரம்பிள்ளை தம்பித்துரை

கடந்த 11.02.2022 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் தாமோதரம்பிள்ளை தம்பித்துரை அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (2022-03-13) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மற்றும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து அனைத்து வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட குருமார், அரசியல் பிரமுகர்கள், கல்வியாளர்கள், ஊடகத்துறை நண்பர்கள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.


குறிப்பு: இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

காளி கோவிலடி,
புத்தமேனி, அச்சுவேலி.

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திரு.கபிரியேல் பிரான்சிஸ் (தியாகு)

(முன்னாள் இ.போ.ச. பணியாளர்)

யாழ்ப்பாணம் இராஜேந்திரா வீதியைப் பிறப்பிடமாகவும் டேவிற் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கபிரியேல் பிரான்சிஸ் நேற்று (11.03.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கபிரியேல் றோசமுத்து அவர்களின் அன்பு மகனும், அஞ்சலீனா (வவா) வின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சவரிமுத்து மரியம்மாவின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான மேரிஜோசெப்பின், பத்தர் இராசதுரை, பெர்ணான்டோ, மோசேஸ், செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், றெஜிஸ்றியூட்டன், நிரோஷாசாமினி, ஒலின்டீனா, அலன் கிளடீசன், சுதர்சன், நொயிலின், கமில்ரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கில்டா, ஜெனோ, விஜயராசா, பாமினி, றஜனி, ஜதுநந்தன், றெனிசியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (12.03.2022) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

(cs43941) (2.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 618 4627

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## அழைப்பின் பேரில் (On Call) பேருந்து (Bus), வான் (van), சிறியவகை பொருட்கள் காவுவண்டி (Mini Truck) வாகனங்களை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடம்மிருந்து

## கேள்விப்பத்திரம் கோரல் 2022 / 2023

தவிசாளர், கொள்வனவுக் குழு அவர்களால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மற்றும் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகம் ஆகியவற்றின் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் (On Call) அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகுதிவாய்ந்த கம்பனிகள், அல்லது தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் |
|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van | 12-16 | 06 |
| 1.2 | பிரயாணிகள் வான், /Passenger Van | 08-10 | 04 |
| 1.3 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus | 42-54 | 05 |
| 1.4 | சிறியவகை காவுவண்டி /Mini Truck | 02 | 02 |

விண்ணப்பிக்க தகுதியுடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை மார்ச் 25 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

01. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்றிறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.

02. மேற்படி வாகனத்தின் கிலோமீற்றர் பதிவுகள், கணிப்பீடுகள் யாவும், சேவை வழங்கும் நாட்களில் வருகை தரும் மற்றும் வெளியேறும் நேரங்கள் அனைத்தும் பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் பிரதானவளாகத்தில் இருந்தும் அறிவியல் நகருக்கான வாகனமாயின் அறிவியல்நகர் வளாகத்தில் இருந்தும் கணிப்பீடு செய்யப்படும். இதற்கான ஏடுகள் நிர்வாகக்கிளையில் அல்லது பாதுகாப்பு பிரிவின் பிரதான வாயிலில் வைத்திருக்கப்படும். அத்துடன் தினசரி வாகன ஓட்டப்பதிவேடு உரியமுறையில் பேணப்படல் வேண்டும்.

03. நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளை கொண்டிருத்தல் அவசியமானது
- பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
- வாகன உற்பத்தி ஆண்டு 2015ம் ஆண்டு அல்லது அதற்கு பிந்தியதாக இருத்தல் வேண்டும்.
- தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் அவரது பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.
- குறைந்தது மூன்று (03) வருடங்கள் வாடகை வாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.
- வருடாந்த வருமானம் கடந்த மூன்று (03) வருடங்களில் குறைந்தது ரூபாய். ஒரு மில்லியனாக (RS 1,000,000. 00) இருத்தல் வேண்டும்.
- ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய சாரதிகள் கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.

04. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள், மற்றும் வணிகத்தேவைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும், அத்துடன் அவற்றிற்கான உரிய சான்றுகள், மற்றும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

05. கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு (Bid security) வைப்புப்பணமாக ரூபா 15000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து 23.07.2022 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் (120 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்புப் வைப்புச் சான்றிதழ் ஒன்றை இணைத்தல் அவசியமானது. மாறாக, காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

06. முழுமையான கேள்வி விண்ணப்பத்தினை தமிழ் மொழியில் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ரூபா 5,000.00 நிதியாளர் யாழ்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில், மக்கள் வங்கி 970000090000387 கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பிரதிப் பதிவாளர், பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

07. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூலஆவணம் (Original), பிரதி (Duplicate) என்று தனித்தனியாக பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அழைப்பின் பெயரில்" (On Call)/ வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல் - 2022 - 2023" எனத் தலைப்பிட்டு பதிவாளர், கேள்விச்சபை, த.பெ.இ- 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 25.03.2022 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் அல்லது கையளித்தல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன், மேற்குறிக்கப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்படாத, முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு:

பிரதிப்பதிவாளர்/ பொதுநிர்வாகக் கிளை –

Tele: 021 2226517, Fax:- 021 2226517.

தலைவர்,
கேள்விச்சபை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(cr.37639)(2.6)

# தங்கத்தின் விலையும் எகிறியது

கொழும்பு, மார்ச் 12

இலங்கையில் தங்கத்தின் விலை எதிர்பாராத வகையில் அதிகரித்துள்ளது என்று சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன்படி, கொழும்பு தங்க ஆபரண உற்பத்தியாளர்களின் விலைகளின்படி தங்கத்தின் விலை இன்று எதிர்பார்க்காத அளவு அதிகரித்துள்ளது. அதற்கமைய 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை ஒரு லட்சத்து 41 ஆயிரமாகக் காணப்படுகிறது. 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரித்துள்ளது. தங்க விற்பனை வரலாற்றில் இலங்கையில் பதிவான அதிகபட்ச விலை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

# சகஜ யோகா
## இலங்கை வழங்கும் தியான வகுப்புகள் எப்போதும் இலவசம் !



அகத்துள் உறைந்திருக்கும் உண்மை, அறிவு, அமைதி, ஆனந்தத்தை தேடி ஒரு தியானப்

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
திகதி: பங்குனி 16, 2022 புதன்
சகஜ தொண்டர்களை சந்தித்தல் : காலை 7 – மாலை 9 வரை

ஆரம்ப அறிமுகமும் பிரதான பயிற்சியும் :

| | | |
|---|---|---|
| காலை : | 7:30 - 8:30 AM , | 9:00 - 10:00 AM |
| மதியம் : | 12:00 - 1:00 PM, | 1:30 - 2:30 PM |
| மாலை : | 4:30 - 6:30 PM, | 7:00 - 8:30 PM |

இடம்: ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம், நல்லூர்
திகதி: பங்குனி 19, 2022 சனி
நேரம்: மாலை 4:30 - 7:00 PM

(CS 43498) (4/6)

தொடர்புகளுக்கு:
0778970509, +12014172986 ( வாட்ஸ் ஆப் / வைபர் )
https://us.sahajayoga.org/

# விநியோகஸ்தர் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் எமது நிறுவனத்தின் தயாரிப்புக்களான ஜாம், பீஸஸ் புறூட், சட்னி, ஐசிங்சுகர் விநியோகம் செய்வதற்கு விநியோகஸ்தர்கள் உடன் தேவை.

(CS 00976) (4/6)

070 525 8238

# கண்ணீர் அஞ்சலி



மன்ற உறுப்பினரும், பிரதேச செயலக கணக்குக்கிளையின் ஓய்வூதிய அலகில் அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றும்

**திரு. சிறிஸ்கந்தராசா கிருபாகரன்**

அவர்களின் பாசமிகு தந்தையார்

## சின்னப்பர் ஸ்ரீஸ்கந்தராசா

அவர்கள் கடந்த 09.03.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், சாவகச்சேரி.

(cr.37633) (2.6)

# மரண அறிவித்தல்



## திருமதி சந்திரவதனி ஜெகதீஸ்வரன்

(ஆசிரியர், சென்.யேம்ஸ் மகாவித்தியாலயம், குருநகர்)

பலாலி தெற்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும் 29,கன்னியர் மடம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரவதனி ஜெகதீஸ்வரன் நேற்றுமுன்தினம் (10.03.2022) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெகதீஸ்வரனின் அன்பு மனைவியும், சொபேட்சியான் (சென்.யோன்ஸ் கல்லூரி மாணவர்), கிசோஜியா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி எதிர்வரும் (14.03.2022) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

(CS 18819) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Angel international school Manipay
## Vacancy for Principal

We are looking for a well Experienced, Highly Motivated, Enthusiastic Dynamic Leader with proven Administrative skills and Management ability to lead our Tutorial staff and Educate future Leaders at Angel International School which currently has three schools within the Jaffna District.

**Required Qualifications and Experience**

1. A committee Christian with high moral values and discipline.
2. 20 years experience in teaching with over 07 years as a Principal or Asst Principal.
3. A Master's Degree or equivalent or Higher Qualifications (M.A (Edu)/ M.Ed/ PGDE ) Remuneration is negotiable.

Please send curriculum vitae (CV) within ten days with two non-related referees to the following.

Mail your resume to: **samrajasuriar40@gmail.com**
Phone No: **0777238300**
Post your resume to: **Director,**
**Angel international school,**
**Mathers Lane, Manipay.**

CR.37634) (2.6)

## IMMEDIATE VACANCY
### We have growing demand and look for Project Lead and Senior Programmers

Excellent opportunity to be part of building a new development team.
A Norway based IT company in Jaffna, Sri Lanka.

### Qualifications & Experience

- Experience in developing with PHP, Laravel, CSS/3, jQuery, AJAX, Bootstrap and MySQL and HTML5.
- Knowledge of working with API's would be added advantage.
- Minimum Two year's experience for PHP Developers.

Salary will commensurate with programming qualifications and international experience - bonus program for employees
Salary starting from 120,000 Rs

Apply with your CV detailing your qualification and work experience, latest by 30th March 2022,
at: majoran@digifront.biz
Contact No: 077 861 4519

CR.37632) (2.6)

## நிரந்தர வேலைவாய்ப்பு

யாழ். பல்கலைக்கழத்திற்கு அண்மையில் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள **பெண்களுக்கான அழகுக்கலை** மற்றும் **பயிற்சி நிலையத்திற்கு நிரந்தரமான பெண் ஊழியர்கள் தேவை.**

- NVQ படித்த தொழில் அனுபவம் உள்ள யாழ். பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சம்பளம் உங்களது திறமைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

**077 222 4541**

(cs.43483) (2) (2 x 6)

## 35வது பொதுப்பட்டமளிப்பு வைபவம்-2022
## வேந்தரின் பேருரைக்கான அழைப்பு

**தலைப்பு:**

**"கடல்வழி வாணிபமும், வணிகப்போர்களும் அழகக்கோனாரின் எழுச்சியும்"**
**"Maritime Trade, Trade Wars and Revival of Dynastic Power AD 1300-1500"**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மதிப்புக்குரிய தகைசார் வேந்தர்
**பேராசிரியர் சி.பத்மநாதன்**
அவர்கள் வழங்கும் சிறப்புக்கருத்துரை
**காலம் : 14.03.2022 (திங்கட்கிழமை)- பி.ப 3.30 மணி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35வது பொதுப்பட்டமளிப்பு வைபவத்தின் ஒரு பாகமாக அமையும். பல்கலைக்கழக வேந்தரின் பேருரை இடம்பெற இருக்கின்றது.

இப்பேருரையானது எதிர்வரும் 14ம் திகதி (திங்கட்கிழமை) - பி.ப 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும். இந் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் மதிப்புக்குரிய தகைசார் பேராசிரியர்.சி.பத்மநாதன் அவர்கள் "கடல்வழி வாணிபமும். வணிகப்போர்களும் அழகக்கோனாரின் எழுச்சியும்" ("Maritime Trade, Trade Wars and Revival of Dynastic Power AD 1300-1500") என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்ற உள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக பேராசிரியர் அவர்கள் கொண்டிருக்கும் புலைமைசார் மற்றும் ஆய்வுசார் கருத்துக்கள் யாழ்ப்பாணக் கல்விச்சமூகத்தினருக்கு குறிப்பாக பல்கலைக்கழக கல்விச்சமூகத்தினருக்கு மிகவும் பயனுறுதி வாய்ந்ததாக அமையப்பெறுவதனால். மேற்படி சிறப்புக் கருத்துரை வழங்கும் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு: மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோர் கொவிட் 19 பரம்பல் தடுப்புக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுடன் நிகழ்வில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

(CR 37638) (4/6) **பதிவாளர்:- 11.03.2022.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற**
**35 ஆவது பட்டமளிப்பு விழாவில்**
**B.E.T (Hons) Bachelor of Engineering Technology) Special in Construction technology**
**பட்டம் பெற்ற**
**செல்வன்**
## கிருபானந்தம் கார்த்திக்
அவர்கள் இன்னும் பல சித்திகளைப் பெற்று நலமோடு வாழ மனமாரப் பாராட்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
**அம்மம்மா - தேவமலர்**
**மாமாமார்**
**பாபு, கோபு, தனு, சுமன், நிமல்.**
**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

(cs.43489) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏறுகின்றது...

ஒரு டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 250 ரூபாவுக்கும் மேலாக வீழ்ச்சியுற்றதால், பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்கியுள்ளது. இதன் முதற்கட்டமாக நேற்று முன் தினம் லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருள் விலையேற்றத்தை அறிவித்தது. அதனைத் தொடர்ந்து கோதுமை மா, பாண், பணிஸ், மதிய உணவு , அத்தியாவசியப் பொருள்கள் ,வெதுப்பகப் பொருள்கள் போன்ற பலவற்றின் விலைகள் நேற்று எகிறியுள்ளன.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் நேற்றுமுன் தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு லீற்றல் டீசலின் விலையை 75 ரூபாவாலும், ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை 50 ரூபாவாலும் அதிகரித்தது. இதைத் தொடர்ந்தே நேற்று மேற்படி அத்தியவசியப் பொருள்கள் பலவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

இதன்படி கோதுமை மா 35 ரூபாவாலும், பாண் 30 ரூபாவாலும், பணிஸ் 10 ரூபாவாலும், சோறு பார்சல் 20 ரூபாவாலும், கொத்துரொட்டி 30 ரூபாவாலும் ஒரு கிலோ பால்மா 300 ரூபாவாலும், 400 கிராம் பால்மா 120 ரூபாவாலும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மருந்துகளின் விலைகள் 29 வீதத்தாலும் விமானப் பயணச்சீட்டு 27 வீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விலை அதிகரிப்பையடுத்து பாணின் புதிய விலை 110 ரூபாவாகவும் கோதுமை மாவின் சில்லறை விலை 156 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக எரிபொருளை துணைப்பயன்பாட்டு மூலப்பொருளாகக் கொண்ட பொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்கலாம் என்று கருதப்படுகின்றது.

(அ-ம)

## சர்வதேச...

ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடன் மீள் கட்டமைப்பு மற்றும் அந்நியச் செலாவணி உள்ளிட்ட விடயப்பரப்பில் இந்தப் பேச்சு முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. ஏப்ரல் மாதமளவில் இந்தப் பேச்சுக்காக பஸில் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீளவேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டும் என்று நிபுணர்கள் பலரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பகடைக்...

மன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசாங்கத்தோடு பேச்சு நடத்தவேண்டியது அவசியம் என்பதை ஏற்றுக் கொண்ட பொழுதிலும், இந்த நேரத்திலே அரசாங்கம் எம்மை அழைத்திருப்பதென்பது எங்களை ஒரு பகடைக்காயாகப் பாவித்து சர்வதேச மற்றும் உள்ளக அரசியல் அழுத்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளும் நடவடிக்கையாக அமைந்துவிடும் என்று நாங்கள் கருதுகிறோம்.

ஜனாதிபதி பதவியேற்ற காலத்திலிருந்து தான் சிங்கள பௌத்த மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர் எனவும் அவர்களுடைய கருத்துக்களுக்கும் அபிலாஷைகளுக்குமே முன்னுரிமை வழங்குவேன் என்றும் தெரிவித்து வருவதோடு மட்டுமல்லாமல், அந்த வகையிலேதான் அவருடைய நடவடிக்கைகளும் அமைந்திருக்கின்றன. குறிப்பாக தமிழர்களுடைய காணிகளை பல்வேறு திணைக்களங்களின் ஊடாக கையகப்படுத்தி வருவதோடு நவீன முறையிலே குடிப்பரம்பல் சிதைப்பையும் திட்டமிட்ட வகையில் ஒரு காலமும் இல்லாத வகையில் நிறைவேற்றி வருகிறார். எமது கோரிக்கைகள் போராட்டங்கள் எல்லாம் பயனற்றவையாகவே போயிருக்கின்றன. ஓரினத்தின் தலைவரே தாமும் இந்த அரசும் என்ற அவரின் நிலைப்பாடு நல்லிணக்கத்துக்கோ பொறுப்புக் கூறலுக்கோ வழியமைக்காது. அத்தோடு பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமை ஆகிய விடயங்களில் அரசாங்கம் எந்தவித அக்கறையும் செலுத்தாமல் செயல்பட்டு வருகிறது.

எமது மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் எமது இனப்பிரச்சினை சம்பந்தமாகவும் முடிவுகளை எடுப்பதற்கு பல தடவைகள் நாங்கள் கோரிக்கைகளை விடுத்தும் எங்களை உதாசீனம் செய்த ஜனாதிபதி இன்று எங்களை அழைத்திருப்பதானது அவர்கள் முகம் கொடுத்து இருக்கக்கூடிய சிக்கல்களில் இருந்து தங்களை விடுவிப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பை பயன்படுத்த நாங்கள் இடமளிக்க முடியாது.

இந்தப் பின்னணியில் நல்லிணக்க நடவடிக்கையாக அரசாங்கம் தமது தரப்பில் செயற்படுத்தக் கூடிய விடயங்களான காணி அபகரிப்பை முற்றாக நிறுத்துதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், அரசியல் கைதிகள் உடனடி விடுதலை, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான பதில் உட்பட, குறிப்பாக ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் பிரேரணையில் கூறப்பட்ட பல விடயங்களில் ஏதாவது ஒரு சில விடயங்களை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு காத்திரமான நம்பகத்தன்மையான சூழலை ஏற்படுத்துவதே பேச்சை முன்னெடுக்க வழிவகுக்கும்.

ஆகவே தாங்கள் இவற்றை கருத்திற்கொண்டு, 'அரச தரப்பில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க சமிக்ஞையின் செயற்பாட்டின் அடிப்படையில் பேச்சில் கலந்துகொள்வதே ஆக்கபூர்வமானதாக அமையும்' என்பதை அரச தரப்புக்கு தற்போதைய சூழலில் எமது நிலைப்பாடாக தெரிவிப்பதே எமது மக்கள் நலன் சார்ந்ததாக அமையும் என்றுள்ளது.

(அ-ம)

## வரிசையில்...

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

'நாங்கள் எரிவாயுவைப் பெறுவதற்காக இன்று காலையில் இருந்து நீண்ட வரிசையில் நிற்கின்றோம். ஆனால் 100 பேருக்கு மட்டுமே எரிவாயு வழங்கப்பட்டதால் எமக்குக் கிடைக்கவில்லை. ஒவ்வொரு நாளும் வருவதும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதும் வழமையாக மாறிவிட்டது. முச்சக்கர வண்டிகளில் எரிவாயுவைப் பெறவந்தால் எரிவாயுவும் கிடைக்காத அதேநேரம் முச்சக்கர வண்டிக்குரிய வாடகையும் கொடுக்க வேண்டிய நிலையே காணப்படுகின்றது. எனவே அதிகாரிகள் பொதுமக்களின் துன்பங்களைக் கருத்தில்கொண்டு இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்' - என்றனர். (அ-ம-27-17)

## யாழ்...

செய்யப்பட்டார்.

தெல்லிப்பழை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் [illegible] லின் அடிப்ப[illegible] பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மற்றும் தெல்லிப்பழை பொலிஸார் இணைந்து அவரைக் கைதுசெய்தனர். சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (அ-ம-27)

## மின்கட்டணம்...

மில்லியன் ரூபா வரையில் மின்கட்டணம் செலுத்தவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் இணைந்த தொழிற்சங்களின் அமைப்பாளர் ரஞ்சன் ஜயலால் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள தனது அலுவலகத்துக்கான மின்கட்டணத்தையே டக்ளஸ் தேவானந்தா கட்டத் தவறியுள்ளார். எனினும் அரசாங்கமோ மின்சார சபையோ அமைச்சரின் அலுவலகத்துக்கான மின் இணைப்பைத் துண்டிக்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-ரி1)

## முல்லைத்தீவில்...

மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையிலேயே மேற்படி வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் இரட்டைவாய்க்கால் பகுதியிலிருந்து ஒருதொகுதி துப்பாக்கி ரவைகளும், 60 மில்லிமீற்றர் வெடிகுண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. அதேபோல் புதுமாத்தளன் பகுதியிலிருந்து, ஆர்.பி.ஜி வெடிகுண்டு ஒன்றும், 81 மில்லி மீற்றர் மோட்டார் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் விடுதலைப்புலிகளின் தயாரிப்பு என்று கருதப்படும் வெடிகுண்டொன்றும் மீட்கப்பட்டுள்ளது. (அ-ம-246)

## நம்பிக்கையை...

நம்பிக்கையை தொடர்ந்து பேணுமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த நெருக்கடிகளுக்கு விரைவில் தீர்வொன்று பெற்றுக்கொடுக்கப்படும் என்று தெரிவித்தார் நிதியமைச்சர் பஸில்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று எமக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நாட்டுக்கு வெளியில் ஏற்பட்டுள்ள நிலமைகளால் வந்த மோசமான விளைவு. உக்ரைன் ரஷ்யா இடையிலான மோதல் போன்ற இலங்கைக்கு வெளியில் இருந்து வரும் நெருக்கடிகளுக்கு எம்மால் எதுவும் செய்ய இயலாது. ஆனால், இலங்கைக்கு உள்ளே ஏற்படும் நெருக்கடிகளுக்கு விரைவில் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்போம். அதற்கு அனைத்துவிதமான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (அ-ம)

## வவுனியாவில்...

வரே உயிரிழந்தார். இறப்பை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றுள்ளது என்றும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, நெளுக்குளம் செட்டிகுளம் வீதியில் பாரதிபுரம் 50 வீட்டுத்திட்ட சந்திக்கு அண்மையில் உள்ள தம்பனைப் புளியங்குளம் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா - நெளுக்குளம் பகுதியில் இருந்து செட்டிகுளம் நோக்கிச் சென்ற பெண்ணின் மோட்டார் சைக்கிள், பாரதிபுரம் 50 வீட்டுத்திட்ட சந்திக்கு அண்மித்த தம்பனை புளியங்குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது எதிர்த்திசையில் வந்த முதியவரின் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதையடுத்து முதியவர் வீதியில் வீழ்ந்துள்ளார். இதையடுத்து அவரின் தலைமீது பிறிதொரு வாகனம் மோதியுள்ளது. முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். வாகனம் தப்பிச் சென்றுள்ளது. காயமடைந்த பெண் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-18-110)

## பேக்கரிப்...

யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க செயலர் க.பாஸ்கரன் தெரிவித்தார்.

நாடாளாவிய ரீதியில் நேற்றுப் பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. இதன்படி பாணின் விலை 110 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பணிஸின் விலையும் தற்போதுள்ள விலையை விடவும் 10 ரூபா வரை உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே யாழ்ப்பாணத்திலும் இந்த விலை உயர்வு நடைமுறைப்படுத்தப்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க செயலர் க.பாஸ்கரன் தெரிவித்தார். (அ-ம-17)

## கச்சதீவு...

வுக்காக இந்தியாவில் இருந்து 76 பேர் கலந்துகொண்டுள்ளனர். அவர்கள் மூன்று விசைப்படகுகள் மற்றும் ஒரு நாட்டுப்படகில் கச்சதீவுக்கு வந்தனர். இலங்கையில் இருந்து நெடுந்தீவுப் பங்குத் தந்தை வசந்தம் தலைமையில் 50 பேர் திருவிழாவில் கலந்துகொண்டுள்ளனர். நேற்றுமாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமானது. இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை இந்திய குருக்கள் இணைந்து திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுக்கவுள்ளனர். (அ-ம-56)

## மண்ணெண்ணெய்...

கொள்ளையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வயோதிபப் பெண்ணொருவர் வரிசையில் நின்றுள்ளார். இதையடுத்து அங்கு வந்த இளைஞர் உடனடியாக மண்ணெண்ணைய் பெற்றுத் தருவதாகக் கூறி ஆயிரம் ரூபாவையும் கொள்கலனையும் அந்த வயோதிபப் பெண்ணிடம் இருந்து வாங்கிக் கொண்டு தலைமறைவாகியுள்ளார். நீண்டநேரமாகியும் இளைஞர் வராதமையால் ஏமாற்றமடைந்த மூதாட்டி அருகில் இருந்தோரிடம் விடயத்தைச் சொன்ன பின்னரே, அவர் பணத்தைப் பறிகொடுத்த விடயம் தெரியவந்தது. (அ-ம-17)

## பெற்றோல்...

அதிகரித்து நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி பெற்றோலின் விலை லீற்றருக்கு 77 ரூபாவாலும் டீசலின் விலை 50 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விலையுயர்வு நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி பெற்றோலின் புதிய விலை ஒரு லீற்றர் 254 ரூபாவாகவும் டீசலின் புதிய விலை ஒரு லீற்றர் 176 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊதியத்தை வழங்குமாறு ஊழியர்கள் போராட்டம்



ஊதியத்தை உரிய காலப்பகுதியில் வழங்குமாறு கோரி குருநகரில் உள்ள வடகடல் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

தொழிற்சாலைக்கு முன்னால் ஆரம்பமான குறித்த போராட்டம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்துக்கு முன்னால் நிறைவடைந்தது. போராட்டத்தில் கலந்துகொண்ட ஊழியர்கள், எமக்கான சம்பளத்தை உரிய காலப்பகுதியில் வழங்கு, ஊழியர்களின் உழைப்பைச் சுரண்டாதே, ஊழியர்களைப் பழிவாங்காதே என்ற வாசகங்களுடனான பதாகைகளை ஏந்திவாறு கோஷமிட்டனர். மேலும் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரி மகஜர் ஒன்றையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்தனர். இதேவேளை- வடகடல் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இரு வாரங்களில் தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (வ-20,27)

## பன்றியின் இதயம் பொருத்தப்பட்டவர் உயிரிழப்பு

அமெரிக்காவில் இரண்டு மாதங்களுக்கு முன் இதய மாற்று அறுவைச் சிகிச்சை யின்போது பன்றியின் இதயம் பொருத்தப்பட்ட நபர் உயிரிழந்துள்ளார். (ச-இ)


**வட இந்திய, காசி சீரடியாத்திரை**

**ஆரம்பம்: 19.04.2022 நாள்கள் 16**

விருப்பமானவர்கள் விபரம் கேட்டறிந்து பதிவு செய்யவும். (cr.37623) (2)(3 x 5)

**ஸ்ரீரெங்கநாதன் - மகன் (ராஜன்)**

**077 768 0102, 077 736 2154**

**பணியாளர் தேவை**



உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு அச்சு இயந்திர இயக்குனர் (மெசின் மைன்டர்) பணியாளர் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வம் உள்ளவர்கள் எதிர்வரும் (14.03.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப 06.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சுத்திகரிப்பு பணியாளர் தேவை**



யாழ். நகரின் மையத்தில் இயங்கும் தனியார் நிறுவனமொன்றுக்கு நிறுவனத்தின் சுத்திகரிப்பு பணியை மேற்கொள்ள பணியாளர் தேவை.

ஆர்வம் உள்ளவர்கள் இன்று (11.03.2022) வெள்ளி மற்றும் நாளை (12.03.2022) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப 02.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**தென்னங்காணி விற்பனைக்குண்டு**

எழுது மட்டுவாள் A9 வீதியிலிருந்து 1 1/2km தூரத்தில் 15 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. 5 ஏக்கர் களாக பிரித்தும் கொடுக்கப்படும். (CS 18784) (4/6)

077 653 1980, 074 037 1960

**சமையலாள் தேவை**

யாழ். நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் ஊழியர்களுக்கு சமையல் செய்யக் கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
23/1, 4ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு:
077 9592 628

**தரம்-5 - 2022**

புலமைப்பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு
சனி, ஞாயிறு - 2.00PM புதன் - 4.30PM

**தரம் - 04 - 2023**

புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆரம்ப அடிப்படை வகுப்பு
சனி, ஞாயிறு - 3.00PM புதன் - 3.30PM

புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன

அருணோதயக் கல்லூரி ஆசிரியர்
திரு.தங்கவேலாயுதம் சரத்பாபு
B.A, P.G.D.E, P.G.D in Special Needs Education, M.A (Education), Dip inTeach (Primary Merit)

Note:- தரம்-5, தரம்-4 இவ் வகுப்புகளுக்கு ஒவ்வொரு திங்களும் தொடர் பரீட்சைகள் நடைபெறுகின்றன. வெளிமாணவர்களும் கலந்துகொள்ள முடியும். முன் பதிவு செய்துகொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு :077 3763 511

இடம்:- பொருளியற் கல்லூரி
நாவலர் றோட் - யாழ்ப்பாணம்.

**இரசாயனவியல்(Chemistry)**

சேதன மற்றும் பௌதிக இரசாயனம் கடந்த கால வினாக்களுடன் துரிய மீட்டல் பிரத்தியேக மற்றும் Zoom வகுப்புக்கள் ஆரம்பம்.
(CR 8057) (4/6) 076 778 1442

**கணிதம், வரலாறு - 06 -O/L, A/L**

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப.
தனியாகவோ, குழுவாகவோ, வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
சிறந்த பெறுபேறுகளுக்கான ஆசான் தனியார் கல்வி நிலையங்களும் தொடர்புகொள்ளலாம்.
(cs 18778) (2) (2/3)

078 263 4356

**பதவி வெற்றிடம்**

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியாவில்
இயங்கி வருகின்ற பிரபல
பல் வைத்திய நிலையத்தில்
பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன

**வரவேற்பாளர்**

- ஆண் / பெண்
  18 - 30 வயதிற்கிடைப்பட்டவர்கள்
- கல்வி - G.C.E (O/L)
  கணினி அறிவு
- சம்பளம் - ரூபா 25000 ஆரம்பம்

**தாதியர் / பயிலுனர்**

- 18 - 23 வயதிற்கிடைப்பட்ட பெண்கள்
- கல்வி - G.C.E (O/L)
- சம்பளம் - பயிலுனர்
  ரூபா 15000 ஆரம்பம்
  அனுபவமுள்ளவர்
  25000 ஆரம்பம்

பயணக் கொடுப்பனவு, தங்குமிடவசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:
international dentalcare@gmail.com
077 758 8729


## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 12 . 1950



இறப்பு 11 . 03 . 2022

**சிவசம்பு பாலச்சந்திரன்**

அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு-பாலச்சந்திரன் அவர்கள் நேற்று (11.03.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு-தங்கமுத்து தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான முத்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், கெங்காதேவியின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், செல்வநாயகி, பகவதிப்பிள்ளை, பாலசிங்கம் (நோர்வே), பாலதுரை (லண்டன்), செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் மாணிக்கவாசகர் (ஓய்வுபெற்ற பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன பொறியியலாளர், அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், கஜலக்ஷன் (Doctor-De Zoysa Maternity Hospital - Colombo), ஜெயலக்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லிஜா (Doctor-National Eye hospital-Colombo), பிரியதர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கவின், அக்ஷிதா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 123 8030
(CS 18825) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.